379

379

# கிருஷ்ணார்ச்சுனன் சண்டை நாடகம்

## சுந்தரராஜன் பாபவிமோசனம்



மலர்மகள் பதிப்பு

இதன் விலை] [அணா 12

O-,892NVP3,
N47
103814

உ

கடவுள் துணை

சுந்தரராஜன் பாபவிமோசனம்

என்னும்

# கிருஷ்ணன் அருச்சுனன் சண்டை நாடகம்

கூடலூர் தாலுக்கா

திருத்துறையூருக்கு அடுத்த குறத்திகிராமத்திலிருக்கும்

வை. வீரப்படையாட்சி அவர்களாலும்

விழுப்புரம் தாலுக்கா

சேர்ந்த பூவாசங்குப்பத்திலிருக்கும்

பா. நாராயணசுவாமி ஆச்சாரி அவர்களாலும்

இயற்றியதை


அ. இராஜரத்தின முதலியாரால்

மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

சென்னை

1947


இதன் விலை] (ரிஜிஸ்டர் காபிரைட்) [அணா 12

# ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகல அச்சுக்கூடத்ததிபர்கட்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில், ம-ள-ள-ஸ்ரீ, திருத்துறையூருக் கடுத்த குறத்திகிராமத்திலிருக்கும் வை. வீரப்படையாச்சியாரா லும், பூவரசங்குப்பத்திலிருக்கும் மா. நாராயணசுவாமி ஆச்சாரியா லும் இயற்றிய "சுந்தரராஜன் பாபவிமோசன மென்னும் கிருஷ்ணன் அர்ச்சுனன் சண்டை நாடகம்" ஆகிய இப்புத்தகத்தை ஷெயாரிடம் சகல சுதந்தரமும் பெற்று அடியிற்கண்ட என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். இப்புத்தகத்தை மகாகனம்பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் செய்திருக் கின்றேன். ஆகையால் இப்புத்தகத்தை என்னுத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது.

இப்படிக்கு

**அ. இராஜரத்தின முதலியார்.**

23, தாண்டவராயப்பிள்ளை வீதி சென்னை.

உ

கடவுள் துணை

சுந்தரராஜன் பாபவிமோசன மென்னும்

# கிருஷ்ணன் அர்ச்சுனன்

# சண்டை நாடகம்

விநாயகர் கவி

அத்தியிஹுருவாய்வந்த ஐங்கராஉன்தாள்போற்றி
எத்திசைமன்னர்போற்றும் இந்ததோர்சரிதைபாட
பத்தியாய்பாலர்நாவில் பக்ஷமாய்யிருந்துநீயும்
வித்தைக்குமுதல்வனை விமலனார்பாலாபோற்றி.

சுந்தரராஜன் வருகிற கவி

அந்தணர்வேதம்பாட அரிவையர்கவரிவீச
குந்தகமில்லாமந்திரி குறிப்பதைஅறிந்துரைக்க
விந்தையாம்மயேந்திராபுரி விரைவுடனாளும்தீரன்
சுந்தரராஜன்தானும் சொகுசுடன்வருகின்றேனே.

சுந்தரராஜன் தரு

நந்திநண்பன்பாதத்தை சிந்தையில்தினம்போற்றி
சுந்தரராஜன்வந்தேன் கொலுமண்டபம்நாடி
சுந்தரராஜன்வந்தேன்
அந்தமானமந்திரிமார் அருகினில்சூழ்ந்துநிற்க
சுருள் அந்தரதுந்தமி நாதமுழங்கிட
கந்தமணிந்திடும் கன்னியர்சூழ்ந்திட நந்

டமாங்கிடுகிடென்ன குமறும்சல்லரிதட்ட
டமடமவென்றுபல வாத்தியங்களும்கொட்ட
சுருள் டங்குடிங்கென தாணியுமதிர
எங்கிலுமாசர்கள் கண்டுமேகதற நந்

முத்துமுடிகள்மின்ன வெற்றிப்பிரதாபனென்ன
எத்திசையோர்களெல்லாம் எந்தனைகண்டுபெண்ண
சுருள் எற்றுவாகனன் யிணையடிமறவேன்
மாற்றுமைமயேந்திரா புரிதனையாள்வேன் நந்

எங்கும்புகழ்பேற்றோங்கும் தங்கும்குறத்திநகர்
சிங்காரமாவைபித்தியலிங்கம் செய்ததவத்தால்வந்த

சுருள் செல்வனும்வீரப்ப தாசனும்பாடினார்
நல்மனதாய்கவி வாணரைதேடினார் நக்

## சுந்தரராஜன் கவி

அருகினில்யிருக்குமென்தன் அன்புள்ளமந்திரிகேளாய்
சரியுடன்பட்டணத்தில் சம்பரமாய்மாரிபெய்து
நெரியுடன்சிறப்புற்றோங்கி நேர்த்தியாய்சகலபேரும்
பிரியமாய்யிருக்கின்றாரா பிசகில்லாமல்தெரிவிப்பாயே.

## சுந்தரராஜன் புலம்பல் தரு

ஐயையோபாவம் அரகராஎன்செய்வேன்
அரும்பாவிஎன்று அகிலத்தில்சொல்லவும்
சுருள் அவலமாகிய கவலைகொண்டனே
புவனந்தன்னிலே புலம்பலானேனே ஐ

உண்டவீட்டிற்கு ரண்டகம் செய்தேனே
உதவிசெய்த பேர்தன்னை மறந்தேனே
சுருள் ஓதியேகுரு வார்த்தை கடந்தேனே
சோதியேஒரு சுதனும்மில்லையே ஐ

திக்கில்லாரென்று தெரிந்துபகைத்தேனே
திருமனை தன்னில் தீயனவிட்டேனே
சுருள் திருடர்தனக்குநான் யிடமும்கொடுத்தேனே
பெருமைபெற்றிட பிள்ளையில்லையே ஐ

அந்தணர்பெரியோரை நான்வைதேனே
அன்னைதந்தையின் வார்த்தைகடந்தேனே
சுருள் ஆலயம்பொது சொத்தையுண்டேனே
பாலனில்லாபெரும் பாவியாகினேன் ஐ

## சுந்தரராஜன் கவி

பக்ஷமாயமர்ந்திருக்கும் பரிவுள்ளமந்திரிமாரே
கஷ்டங்கள்பட்டபோதும் கவலையும்தீர்வதில்லை
தக்ஷணம்நீயும்சென்று தையல்என்தேவிதன்னை
இக்ஷணம்எந்தன்முன்னே யியல்புடன்கொண்டுவாராய்.

## பொது வசனம்

இவ்விதமாகத்தானே சுந்தரராஜன் தன்தேவியை யழைக்க அதுவேளை சுந்தரவல்லி வருகிறவிதங் காண்க.

### சுந்தரவல்லி வருகிற கவி

வஞ்சகமில்லாநாதர் வகையதாயெனையழைக்க
கொஞ்சுமாங்கிளியைபோலே கோதைமாருடனேகூடி
தஞ்சமாய்எழுந்திருந்து தையல்வெண்பட்டுடுத்தி
மிஞ்சியேசுந்தரவல்லி மெல்லியும்வருகின்றேனே.

### சுந்தரவல்லி தரு

சுந்திரனுதயம்போலே எந்தனின்மேனியிலங்க
சுந்தரவல்லிமாது சொகுசுடன்வந்தேன்
நந்திவாகனமேரும் சுந்தரமூர்த்தியைக்கோரி
சிந்தைமிககளித்து சேயிழைவாறேன் சுந்

சோலைகுயிலைபோலே சொகுசாய்தொனிகள்பேசி
சாலமில்லாநடையுடையாள் சபைதனில்வந்தேன்
மன்னவரழைத்தசேதி மார்க்கமாககாணவேண்டி
உன்னிதப்பணிகுலுங்க உத்தமிவந்தேன் சுந்

### சுந்தரவல்லி சருணை தரு

ஆண்டிபண்டாரம் உன்னை வேண்டிக்கொண்டேனே என்றமெட்டு

மன்னவாசருணம் மாதுயித்தருணம்
மன்னுமலர்கள்கொண்டு மங்கையாள்போற்றிசெய்தேன்
உன்னிதமாய்சிரங்குனிந்தேன் உத்தமாயெந்தனைகாரும் ம

### சுந்தரராஜன் தரு

திருவடிபணிந்தஎன் அரிவையேவாழி
திருவடிபணிந்ததினால் தேவியேஎந்நாளும்
வறுமையொன்றும்வந்திடாமல் வையகத்தில்வாழ்ந்திருப்பாய் தி

### சுந்தரவல்லி தரு

மன்னவாவாரும்மங்கை சொல்தனைகேளும்
என்னகாரணமாக எந்தனையிங்கழைத்தீர்
நன்னயமாகத்தானே உன்னிதம்தனையுரைப்பீர் ம

### சுந்தரராஜன் தரு

மாதேநீகேளும்அதை மகிழ்ந்துயிந்நாளும்
ஆதரவாயழைத்தவிதம் அன்னமேஉரைப்பேனடி
காதலைதீர்ப்பதற்கு கண்மணிசுதனுமில்லை மா

### சுந்தரவல்லி கவி

உத்தமபிராணநாதா உருகியேவாடவேண்டாம்
பத்தியாய்நவக்குமிப்போ பாலகன்யில்லையென்று

அத்தியையுரித்தணிந்த அரனார்க்கும்கிருபையில்லை
சித்தமாயரண்மனைக்கு சிறப்புடன்யேகலாமே.

சுந்தரராஜன் தரு

அன்னமே தவம்செய்து மாதே ஒரு
அருஞ்சுதன்பெற்றுவாறேன் யிப்போதே
வன்னியேந்திடும்யீசர் வள்ளலை துதித்துவாறேன்
கன்னியேஎந்தனுக்கு உடுகஉத்தாரம்தாரும் அ

சுந்தரவல்லி தரு

அரண்மனையிலிருந்து நாதா நாம்
அளவில்லாதர்மம்செய்தால் வேதா
பரமனருளினாலே பாலகனுண்டாகும்
வறுமையில்லாமலே வஞ்சியாள்வார்த்தைகேளும் அ

சுந்தரராஜன் தரு

தவம்செய்யாப்புத்திரன்பெற்றோரில்லை நீ
தடுத்துபேசாதேஎந்தன் சொல்லை
பாவந்தனையொழித்து பாலன்வரம்பெற்றுவாறேன்
மவுனவார்த்தைகள்வேண்டாம் மங்கையேபோரானடி த

சுந்தரவல்லி தரு

எத்தனைவிதம்சொன்னாலும் நீரே என்னை
குத்தமாய்பேசுகிறாய் மன்னரே
சித்தமாய்முப்பத்திரண்டு தானதர்மம்செய்தாலே
உத்தமர்க்கிருபையாலே புத்திரன்கிடைக்கும்தானே சி

சுந்தரராஜன் கவி

கெடிபெறஎனதுதேவி களிப்புடன்உரைத்தாய்போலே
சுடுதியில்பலகைதன்னில் சம்பரமாஎழுதிநாமும்
படிமிசையோரும்காண பலவிததர்மம்செய்வோம்
வடிவினில்மிகுந்ததேவி வஞ்சியேஅமாலாமே.

பொது வசனம்

இவ்விதமாக மயேந்திராபுரியில் சுந்திரராஜன் தனக்கு பிள்ளை யில்லை என்று கருதி வேண்டிய முப்பத்திரண்டு தானதர்மமும் செய்யும்படி நினைத்து ஓர் போர்டுபலகையில் எழுதி கட்டிவிட்டு தன் தேவியோடு அரண்மனையிலிருக்க அதுவேளை நாரதர் தர்பாருக்கு வருகிறவிதங் காண்க.

நாரதர் வருகிற கவி

உச்சிதசடைகளாட உயர்ந்ததோர்காவிபூண்டு
மெச்சவேவீணைமீட்டி மேட்டிமையாகத்தானே
கச்சிதவார்த்தைபேசி கலகங்கள்யில்லையென்று
அச்சுதன்பேரனை அருமைநாரதனும்வந்தேன்.

நாரதன் தரு

வேதன்தனக்குமைந்தன் தானே நாரதமுனி
வேண்டியகலகம்செய்வேன் நானே
ஆதாரமாகநிஷ்டை அன்புடனேபுரிந்து
சுருள் அரகராவென்று பரமனைகோரி
திரமுடன்அருளை பெருகுவேன்தேரி வே

வையகமெல்லாம்சுற்றிப்பார்த்தேன் எனக்கிசைந்த
வகையாய்கலகம்காணுமல் பூர்த்தேன்
கையிலாழிஎடுத்து கணக்கிலாசுதிதொடுத்து
சுருள் காணவேசிஷியர் கடுகியேவந்து
தோணவேபணிவார் துரிதமாய்முந்து வே

நீண்டசடைகள்மிகஆட யாவராலும்
தொண்டுசெய்து அன்புகொண்டாட
வண்டணிபரமனும் வகையுடன்இருக்கும்போது
சுருள் வாட்டமாமயேந்திரா புரிதனைசெல்வேன்
நாட்டமாய்கலகம் நான்கண்டு உய்வேன் வே

பூவரசங்குப்பத்தில் வாசன் மாணிக்காச்சாரி
புகழும்தவத்தால் வந்தநேசன்
கவனமாய்சுப்ரமண்ணியர் கழலடியைத்தொழுது
சுருள் களிப்பாய்நாராயணசாமியும் பாடினார்
வெளியினில்வேணபுலவரை நாடினார் வே

நாரதர் கவி

நல்லதுசிஷியரேகேள் நாமுமேயிந்தநாளில்
உல்லாசமாகத்தானே உலகெல்லாம்சுற்றிப்பார்த்தேன்
புல்லெனகலகமொன்றும் புலப்படாவிதங்களென்ன
துல்லிதபோர்டுதான் துலங்கவேகண்ணால்பார்த்தேன்.

சுந்தராஜன் சருண தரு

நீண்டசடையிலங்கும் ஆண்டவரேஉன்பாதம்
வேண்டிசிரங்குனிந்தேனே சுந்தராஜன்

பாண்டவர்சகாயனைப்போல் பார்க்கும்போதேதோணுதே
சுருள் பத்தியாய்எந்தனை மெத்தவேகாப்பீர்
உத்தமரேகுறை சித்தமாய்தீர்ப்பீர் நீ

நாரதர் தரு

சித்தமகிழ்ந்துஎந்தன் சேவடிதொழுதிட்ட
உத்தமனேநீவாழ்குவாய் உன்எண்ணம்போலே
முத்தியளிக்குமீசர் முகந்தனைகாணவேண்டி
சுருள் முக்கியமாகவே முறையுடன்செல்வேன்
பிடிக்கவேயுந்தன் மெல்லியும்சுகமுடன் சி

சுந்தரவல்லி தரு

செல்லலாகாதுசுவாமி சீர்மனைதன்னில்வந்து
நல்லபோஜனம்செய்குவீர் எங்கள்தெய்வமே
அல்லும்பகலாய்வந்த அருமுனியோகியர்க்கும்
சுருள் ஆவலாய்தான தர்மமும்செய்வோம்
தேவையானநல் லருளதைபுரிவோம் செ

நாரதர் கவி

அருளதைபெருவோமென்ற அரசனேசொல்லக்கேளாய்
பெருமையாய்எழுதியாதோ பெலமுடன்கட்டிவைத்தாய்
யிருவருமாகநீங்கள் என்னைதிர்நின்றுயிப்போ
கருதியேஷிபரந்தன்னை காணவேதெரிஷிப்பாயே.

சுந்தரராஜன் கவி

சொல்லுவேன்கேளுமையா சுதனுமேஎனக்கில்லாமல்
நல்லதோர் அருளைக்காண நாங்களும்தானதர்மம்
எல்லையில்செய்துவாரோம் எங்கள்மேற்கிருபைகூர்ந்து
வல்லவாதாங்கள்வேண வகையதைகேட்டிடாயே.

நாரதர் தரு

என்னதானங்கள்செய்குறாய் யிறையோனேஉரைதானே
முன்னதாய்பார்க்கவேணும் உன்னிதம்தன்னையே
மன்னவனேஎனக்கு மனதுவெருக்கும்படி
சுருள் மட்டில்லாதானம் இட்டமாய்தருவாய்
பொட்டெனஎனக்கு சட்டமாய்புரிவாய் என்

சுந்தரராஜன் தரு

அன்னதானங்கள்முக்கியமே ஓசுவாமிஅருள்நேமியாண்
பின்னமில்லாமலே பிரியமாய்செய்கிறேன்

தன்னிகரில்லாசுவாமி தருகுவேன்முப்பத்திரண்டும்
சுருள் தவமுனியோரே கவனமாய்கேளும்
சிவனிடகிருபையால் சிறப்பாயிந்நாளும் த

## நாரதர் தரு

இதுவோபெரிதான தர்மமோ அறியேனோதெரியேனோ
நீ அதுகளைபிரியமாய் மெதுவாகஉரைக்குறாய்
கெதியில்லாபேரல்லவோ கேழ்ப்பார்களன்னம்வந்து
சுருள் கேவலமான வார்த்தைசொல்லுறாய்
தரபிரியமில்லை தானினிசெல்வாய் இது

## சுந்தரராஜன் தரு

சொர்ண தானங்கள்வேண்டுமோ ஓநீ தரமுனிநாதா
அதைவர்மமில்லாமலே வாககதையுரைப்பாய்
தர்மநீதிப்பிரகாரம் தவமுனியோரேகேளும்
சுருள் தருகுவேனிப்போ தடைகளுமில்லை
வெருக்கவும்மாமோ விளம்புவாய்சொல்லை சொ

## நாரதர் தரு

பிச்சையெடுக்கும்ஆண்டியோ தினம்வந்துமனம்நொந்து
நீகச்சிதவார்த்தை உச்சிதம்பேசுகிறாய்
வச்சிரமுடிதரித்த வல்லவனென்றுஎண்ணாதே
சுருள் வேண்டாம்உன்னிட தானமேஎனக்கு
தீண்டாதேவார்த்தை தூண்டாதேபிணக்கு பிச்

## சுந்தரராஜன் தரு

எந்தன்மேல்கோபம்வேண்டாமே நீபாரும்அருள் தாரும்
நீமுந்தியுரைத்திடுவாய் யந்தபடியேதாரேன்
சிந்தைகுளிரமுனி நாதனே தங்களுக்கு
சுருள் சீருடனே அதை கூறுவீர்தானே
தருணமேஅதுகளை புரிகிறேன்நானே எ

## நாரதர் தரு

எத்தனைவிதமாகஎடுத்துசொன்னபோதும் கேளேனேகேளேனே
பித்தம்பிடித்தவன்போலேநீபேசுறாய் மீளேனேமீளேனே

## சுந்தரராஜன் தரு

என்னகொடுத்தபோதும்வேண்டாமென்கிறீர் சுவாமியேசுவாமியே
மின்னலைபோலவேமிதமில்லாவஸ்திரம் தருகிறேன் தருகிறேன்

நாரதர் தரு

உடுத்தஉடையில்லாஊதாரிநானல்ல ராஜனேராஜனே
எடுத்துயேளிதமாய்எனைப்பழிக்கவந்தாய் தீரனேதீரனே

சுந்தரராஜன் தரு

தங்களிடமனபாகத்தைசாற்றுவீர் ஐயனேஐயனே
அங்கங்குளிரவேஅதுகளைப்பெற்றுக்கொள் ஐயனேஐயனே

நாரதர் தரு

எண்ணத்திலிருப்பதைஎனக்குத்தருவாயோ தீரனேதீரனே
உண்மையாய்தருகிறேன்என்றுஉறுதியும் செய்குவாய்செய்குவாய்

சுந்தரராஜன் தரு

சத்தியம்சத்தியம்சத்தியம்தருகிறேன் சுவாமியேசுவாமியே
எத்தைகேட்டபோதும்சித்தமாயளிப்பேன் சுவாமியேசுவாமியே

நாரதர் கவி

சத்தியம்செய்துவிட்டாய் சகலரும்காணத்தானே
சித்தத்தில்நினைத்தசேதி சிறப்புடன்பலிதமாச்சு
அத்தன்மால்சாக்ஷியாக அரசனேதவிரவேண்டாம்
சுத்தமாய்கன்னிதானம் சுருக்குடன்தந்திடாயே.

சுந்தரராஜன் புலம்பல் தரு

ஐயையோயிதுவேன்ன அனியாயவார்த்தைகேழ்க்க
ஆவிபதைக்குதையோ முனிநாதா

மெய்யும்புண்ணாகுதிப்போ மிகமனஸ்தாபம்வேண்டாம்
மேட்டிமையாககாரும் முனிநாதா

கன்னிகாதானம்கேட்டால் என்னநான்செய்யபோரேன்
காத்துரக்ஷித்தாளுவாய் முனிநாதா

சுதன்பெறஎண்ணியே மிதமில்லாதானதர்மம்
பதமாய்யளித்துவந்தேன் முனிநாதா

சுந்தரராஜன் கவி

அண்ணலின்கிருபையாலே அருமையாய்சுதனுங்காண
எண்ணியேதானம்செய்ய எழுதினேன்பலகைதன்னில்
வண்மையாய்கன்னிதானம் வசங்கையும்எனக்கேயில்லை
தண்மையாய்பிந்தவேளை தவமுனியோரேயேகும்.

நாரதர் தரு

வருமென்றுஎன்னிடத்தில் வேகமுடன்ஓதவந்தாய்
ஏர்க்குமா நல்ல மார்க்கமா
வேகுதிப்போசீக்கிரத்தில் விள்ளுவாய்கன்னிகாதனம்
ஓது எழுதுவ ரேது

சுந்தரராஜன் தரு

எழுதினகுற்றமதை யின்பமாய்மனம்பொறுத்து
கார்ப்பீர் வினை தீர்ப்பீர்
பழுதில்லாமுனியோரே பாதமலர்சரணம்
பாரும் கிருபை கூறும்

நாரதர் தரு

பாருமென்றுஎன்னிடத்தில் சீருடனேஓதவந்தாய்
பதட்டா நல்ல புரட்டா
கோரினபடியேநீயும் கொடுத்திடும்கன்னியொன்று
யேகுறேன் யிப்போ போகிறேன்

சுந்தரராஜன் தரு

எப்படியாவதுஅயல் கர்ப்பிணியைகொண்டுவந்து
தாரேன் யிதோ போரேன்
கைப்பிடியாய்நீரும்வந்து செப்பினவசனங்கேட்டு
நோகுதே உடல் வேகுதே

நாரதர் தரு

மட்டித்தனமாகவந்து அட்டில்லாஅயல்பெண்ணே
வாது உத வாது
சட்டமாகஉந்தன்பாரி திட்டமாஎனக்குதந்தால்
ஞேயம் நல்ல ஞாயம்

சுந்தரராஜன் கந்தார்த்தம்

பரிதேசிபயலேநீயும் பதட்டமாய்என்னிடத்தில்
தெரியாதமுடன்போலே தேவியைக்கேட்கவந்தாய்
மரியாதையாயிந்நேரம் மனமதுபொறுத்திருந்தேன்
சரிசரி எட்டிப்போடா,

தரு

சாடுவேனுன்னையிருகரத்தால் போடுவேன்முன்னே
காடுவனம்சுற்றும் கேடுகெட்டமேயா
நாடுநகர்சிரிக்க நலங்கினம்வேட்க

நாரதர் கந்தார்த்தம்

சாடுவேனென்றுஎன்னை சதிகாராஉரைக்கவந்தாய்
காடுகள்மேடுபள்ளம் கானலும்பனியில்வேட்க
தேடுவாளுனதுதேவி தேம்பியேபுலம்பிவாட
வாடுதேஎந்தன்நெஞ்சம்,

தரு

வகையுடனளித்தேன்உனக்குசாபம் திகைத்திடகொடுத்தேன்
பகைசெயதுகொண்டதால் வகையுடன்உனக்குமே
அகமதுகோதிக்குதே அஸ்வமாய்நீபோக வ

சுந்தரவல்லி வேறு தரு

முனிவரேயிங்ஙனம் வாருமே யிப்போ
மொழிந்நவரமென்று கூறுமே
பணிவிடைசெய்திட்ட பாக்கியமிதுதானே
யினியிங்குநிற்காதே யியல்புள்ளயோக்கியனே மு

நாரதர் தரு

பட்டிமுண்டைஎட்டி செல்லடி நீயும்
பகரவேண்டாம்ஞாயம் நில்லடி
சட்டமாய்சாபமும் சபிப்பேனேஉனக்குமே
அட்டியில்லாமலே அதுவேஉபாயமே பட்

சுந்தரவல்லி தரு

செய்தபிழைமனம் தாளும் யிப்போ
கைதொழுதேன்யிந்த நாளும்
மெய்யும்பதருதே ஐயையோமுனிவரே
தையல்மீதுகிருபை தான்வைத்துவிடுவீரே செ

நாரதர் தரு

விடமாட்டேஎவிடமாட்டேன் மட்டியே யினி
தடையில்லாமற்றள்ளுவேன் நெட்டியே
படபடவென்றுமே பதருதேகோபங்கள்
தடதடவேகமாய் தள்ளுவேன்பாருங்கள் விட

சுந்தரவல்லி கவி

தஞ்சமுன்பாதந்தன்னில் தவமுனியோரேபோற்றி
கெஞ்சினேன்பிங்கவேளை கெடிபெறஉலகந்தன்னில்
வஞ்சகம்பேசநெருடும் வருமையில்லாதசுவாமி
அஞ்சவும்வேண்டாம்எந்தன் அரசனைவிடுவீர்தேவா.

நாரதர் தரு

புரவிதன்னைதிறமாய் யோட்டினேன்நாரதமுனி
கரந்தனில்வீணைகடுக ட்டினேன்
திறமுடன்கயர்கழுத்தில் கட்டினேன்நாரதமுனி
சரமாகசவுக்காலே தட்டினேன்
நடையும்வேகமாகபோகுதே யிந்த ருமைபரியும்
துடையும்மசைந்துமனம் பதைக்குதே
கிரியைகுடையாய்பிடித்தவர்தனக்கே பிந்த திரைதன்னை
பிரியமாய்தருவேன் இன்றைக்கே புரவி

சுந்தரவல்லி புலம்பல் தரு

அம்மம்மாஎன்னசெய்வேன் என் அரசனைவிழந்தேன்
நம்மாலேஆகாதம்மா ாதன் தனைப்பிரிந்து
ஜென்மம்தனையொழிக்க செல்லுவோயானுமிப்போ
என்னைப்போற்கன்னியெல்லாம் ஏளிதம்செய்வாரையோ
சதுரங்கசேனைகாண சம்பிரமாய்மாலையிட்டீர்
யிதுதானோகண்டபலன் எந்தனிடமன்னவரே
பாதவித்தாலென்னபலன் பாங்கியரேஇல்லறத்தில்
திறமுடனேகாற்றிருங்கள் தேவியாளும்தானிருப்பேன் அ

பொது வசனம்

இந்தவிதமாய் மயேந்திரபுரியாளும் சுந்தராஜனுக்கு நாரதர் அஸ்வமாக சாபம் தந்து அந்த அஸ்வத்தை பிடித்துக்கொண்டு துவாரகாபுரிநாடி செல்ல அதுவேளை கிருஷ்ணன் சபைக்கு வருகிற விதங் காண்க.

கிருஷ்ணன் வருகிற கவி

திரமுடன்கவிகைக்கார்த்த தீதிலலாமாயன் தானும்
கரமதில்சங்குசக்கரம் களிப்புடன்ஏந்தும்வாசன்
சரமதாய்லக்ஷிமிமாது சாலமில்லாமல்தங்க
அரவத்தில்சயனித்தோங்கும் அரிகிருஷ்ணர்வருகின்றேன.

கிருஷ்ணர் தரு

வேதன்தனையளித்த கசடர்களைமடித்.
வேணுகோபாலன்வந்தேன் நல்ல
விண்டலம்மண்டலம் உண்டிடும்ஜீவர்க்கு
வெகுவிதகாக்ஷியும்தந்தேன்
பூதலமன்னரெல்லாம் புகழ்ந்துஅடிவணங்க
சுருள் பூரணகாரண தீரனும்நானே
மாரனையுண்டு செய்தவர்தானே

பஞ்சவரெந்நாளும் நெஞ்சில்நினைத்துகொண்டால்
வஞ்சகமில்லாமல்செல்வேன் வெகு
சுந்திரகெருடன்விந்தையாய்யேறி அவர்க்கு
சஞ்சலமில்லாமல்தீர்ப்பேன்

கொஞ்சும்கோபாலமாதர் ரஞ்சிதமாசூழ்ந்துநிற்க
சுருள் கோரியசாமரை மீரியேவீச
நாரிபர்பவித கல்மொழிபேச

வேதமறையோர்வந்து நாதம்முழங்கிநிற்க
பேதகமில்லாமல்தொழுவார் நல்ல
அரிகரிமுராரிவரதா கோவிந்தாவென்று
அல்லும்பலும்துதிப்பார்

பாதகசயிந்தவனை பதினான்காம்நாளில்கொல்ல
சுருள் பக்ஷமாய்கதிரோனையும் மறைத்தேன்
திக்கெல்லாம்புகழ தேர்விஜயனால்மடித்தேன் வே

பெருமைமுடைய தருமர்தனைஎதிர்த்து
பொல்லாகர்வங்களும் கொண்டார் அந்த
போக்கிரிமனும் மூர்க்கமாவிஜயனும்
பூமிபிரிக்வேநின்றார்

அருமையாகவேநானும் அவர்களையடக்கஎண்ணி
சுருள் வலாய்பாம்பு பிடாரனய்சென்று
டுவியேகெர்வத்தை அடக்கினேன்நின்று வே

கிருஷ்ணன் கவி

பக்ஷமாதவாகேள் பகருவேன்வார்த்தையொன்று
சிக்னெஓடிநீங்கள் சீர்பனைதன்னிலிப்போ
தக்கதார்என துதேவி தையல்லக்ஷிமியாள்தன்னை
அரையாகசென்று அருகினில்கொண்டுவாராய்.

பொது வசனம்

இவிதமாக கிருஷ்ணர் தன் தேவியையழைக்க அதுவேளை லக்ஷிமிதர்பாருக்கு வருகிறவிதங் காண்க.

லக்ஷிமி வருகிற கவி

ர்க்கோடகத்தின்மீதில் காக்ஷியாய்துயிலும்மன்னர்
ர்க்கமாயெனையழைக்க திருவடிகாணவேண்டி
நேர்த்தியாய்பணிதிருத்தி நிலைபெறும்லக்ஷிமிமாது
பார்த்தவர்மிககொண்டாட பக்ஷமாய்வருகின்றேனே.

### லக்ஷிமி தரு

எங்கும்நிறைந்தமங்கை    சங்கரர்தனக்குதந்தை
ஏந்திழைமாதுவந்தேன்    லக்ஷிமிஎன்னும்
ஏந்திழைமாதுவந்தேன்

சங்குடனாழியேந்தும்    சுவாமியென்னையழைக்க
சுருள் சாலமில்லாமலே    சடுதியில்சென்று
சீலமாய்பணிந்திட    வேண்டுமேயின்று    எ

எந்தபேர்களானாலும்    சிந்தையில்தியானம்செய்தால்
சிந்தையாகவேஅமர்வேன்    நந்தயிடத்தில்
சிந்தையாகவேஅமர்வேன்

குந்தகமில்லாமாதர்    அந்தபுரம்சுத்தம்செய்தால்
சுருள் குறைந்திடாசெல்வம்    நிறைந்திடதருவேன்
யிரைந்திடும்யிடத்தில் மூதேவியைவிடுவேன்    எ

பட்டிமுண்டைகளுக்கு    எட்டுமேஎந்தன்பாதம்
திட்டமாயானுரைத்தேனே    யாவருங்காண
திட்டமாயானுரைத்தேனே

எட்டிஎட்டிநாதனோடு    சட்டம்பேசும்பெண்களுக்கு
சுருள் ஏகிவெதமனும்    உயிர்தனைபோக்கி
வேகிடஅக்கினியில்    தள்ளுவார்நோக்கி    எ

அதிகாலையிலெழுந்து    மதிபோல்முகம்விலக்கி
பதியில்இருக்கும்மன்னர்க்கு    தொண்டுகள்செய்தால்
பதியில்இருக்கும்மன்னர்க்கு

கெதிபெறகடவுள்பாக்கியம்    கீர்த்தியதிமாகும்
சுருள் கெஞ்சென்றும்கருதி    கேளாதபெண்கள்
வஞ்சகம்செய்ய    மூதேவியும்வழங்குவள்    எ

### லக்ஷிமி சருண தரு

கடலாடிமலைமீதிலமர்ந்த என்ற மெட்டு

மலையைகுடையாய்    நிலையாய்பிடித்தமன்னா
மங்கைபோற்றினேன் மன்னா    மங்கைபோற்றினேன்
மலர்கள்பதம்சாற்றினேன்

மங்கையரைகார்த்தாய்    கோபிமார்துயர்தீர்த்தாய்
முடுக்கு மாதவர்போற்றிடும்    யசோதையின்மைந்தா
ஆதரவாய்காரும்    சீதரமுகுந்தா    மலை

### கிருஷ்ணர் தரு

ஆசைக்கிசைந்தயீசன்தங்கையே    அருவையேசும்வாழ்குவாய்
அருவையேவாழ்குவாய்    தருணம்கிருபபெருகுவாய்

அடிபணிந்தமாதே ஆர்வதித்தேன்யிப்போதே
சுருள் அகிலந்தன்னிலே மகிமைதங்கிடும்
பகீரதர்தங்கை என்றுவிளங்கிடும் ஆ

லக்ஷிமி தரு

சுருளிமலைமீதில் என்ற மெட்டு

பாரோர்புகழ்சபையில் என்னை நீ
சீராய்பழுத்ததேசதி தன்னை யிப்போ
பக்ஷமானக்ஷேமந்தனை யிக்ஷணத்தில்தானறிய
விள்ளும் அதை சொல்லும்

கிருஷ்ணர் தரு

விள்ளும்படிதானுரைத்த தேவி யிப்போ
உள்ளந்தைசொல்வேனடி மேவி அதை
கள்ளமில்லாமாதரசே நல்லதனமாகத்தானே
காண அருள்பாவிப்போம் தோண

லக்ஷிமி தரு

வார்த்தையொன்றுயானும்கேழ்ப்பேன் தேவா நீ
கீர்த்திராய்போதிக்கவேண்டும் மூவா எந்த
நேர்த்தியனதொண்டருக்கு பூர்த்தியாககாக்ஷிகொடுக்க
யில்லை எவரும் வல்லை

கிருஷ்ணர் தரு

தீர்க்கமோசனைசெய்தால் எனக்கு ஒன்றும்
தேவியேறற்படவில்லை கணக்கு ஆனால்
மார்க்கமானாரதனும் தீர்க்கமாகவாராளுடி
மானே பசும் தேனே

லக்ஷிமி கவி

நல்லதுபிராணநாதா நாரதன்வந்தாலென்ன
புல்லெனலகந்தானும் புகட்டுவான்வந்துயிப்போ
வல்லவாபுதனுல்நீரும் வாடிடவேண்டாம்சுவாமி
உல்லாசபீடந்தன்னில் உத்தமா அமருவோமே.

பொது வசனம்

இவ்விதமாக கிருஷ்ணரும் லக்ஷிமியும் அடியார்களுக்கு காக்ஷி கொடுத்துவிட்டு அமர்ந்திருக்க அதுவேளை நாரதர் பகவானைக் காணும்படி வருவது.

### நாரதர் தரு

கண்ணன்தன்னைத்தேடியே    கடிகிவாரேனேடியே
ஓடியேநாடியே    ஒயிலாவீணைபாடியே
வண்மையாகசெல்லுவேன்    வகையாய்கலகம்விள்ளுவேன்
விள்ளுவேன்புல்லுவேன்    விபரந்தன்னைசொல்லுவேன்
பரியையிதோஓட்டுவேன்    பரந்தாமனிடம்காட்டுவேன்
காட்டுவேன்ஓட்டுவேன்    கலகந்தன்னைமூட்டுவேன்
துவாரகாபுரிகண்டேனே    தாகித்திடஉள்ளங்கொண்டேனே
கொண்டேனேகண்டேனே    கோரும்எண்ணம்முடிப்பேனே க

### நாரதர் சருணை தரு

காவடிகொண்டு சேவடிநம்பும் என்ற மெட்டு

பக்ஷிவாகனமீதிலமர்ந்திடும்    லக்ஷிமிநேசா
பௌத்திரன்உந்தன்பாதம்பணிந்தேன்    கார்த்திடும்வாசா
அஷ்டதிசைகளைகுஷ்டிவைத்து    கார்த்ததேவா
அருமுனிநாரதன்சிரமதுகுனிந்தேன்    எனையாளும்மூவா

### கிருஷ்ணன் தரு ஷெடி மெட்டு

கரமதுகூப்பிசிரமதுகுனிந்த    எந்தன்பேரா
காசிதன்னிலேநேசமாய்வாழ்வாய்    என்னும்சீரா
திறமையாய்தேடிபிரியமாய்வந்த    சேதிகளென்ன
அருமையாய்எனக்குபெருமையாய்சொல்லும்    கண்மணிமுன்னே

### நாரதர் தரு

பாட்டியேஉன்திருவடிதன்னிலே    யானும்போற்றி
பாசமதாகியநேசமாய்நாரதன்    மலரதைசாற்றி
வாட்டமாய்வெகுஉலகத்தைசுற்றி    நாட்டமாய்வந்தேன்
வகையுடன்எந்தனை சுகமுடன்காரும்    பாதம்பணிந்தேன்

### லக்ஷிமி தரு

பலபலவிதமாககலகங்கள்செய்யும்    எந்தன்பாலா
பாங்குடன்உலகமீதினில்சுற்றிடும்    அருமைசீலா
நலமுடன்சுகமாய்வாழ்ந்திடுவாய்    நீஎந்தநாளும்
நாடியேவந்தசேதிகளென்ன    உரைப்பாயிந்நாளும்

### நாரதர் வேறு தரு

சேதியொன்றும்கொண்டுவரவில்லை தாயே தாத்தா
பாதசேர்வைகாணவந்தேன் சேயே
ஓதினேன்உந்தனுக்குஉள்ளது    ஒன்றுமேயில்லை
சாதினமாகத்தானே    சத்தியலோகம்போரேனம்மா

### கிருஷ்ணன் தரு

அப்பாநாரதனேவாரும் வந்த
உடனேஎங்கேபோறுய்கூறும்
செப்படாஉள்ளசேதி தப்பிதமில்லாமலே
ஒப்புடன்யானறிய ஒதுவாயிந்நாளே

### லக்ஷ்மி கவி

பஞ்சவர்தன்னேக்கார்த்துப் பாரதம்முடித்தநாதா
நெஞ்சினில்கலகம்யாதோ நேர்த்தியாய்நினைத்துவந்து
வஞ்சகமாதகத்தானே வகையதையுரைக்கவில்லை
கஞ்சனேவதைத்தபாதா கருத்ததைஅறிந்திடாயே.

### கிருஷ்ணன் தரு

சூதுசெய்யாமலேநாரதா அப்பாநாரதா
சூக்ஷத்தைஒளியாமல்சீரதா அப்பாசீரதா
ஓதுவாய்சீக்கிரம் உத்தமநாரதா
பேதகமில்லாத வேதன்யீன்றமைந்தா ஆ

### நாரதர் தரு

என்னென்றுசொல்லுவேன் கண்ணுமேகவண்ணு
என்மனம்வாடுதே புண்ணுசொல்லஉண்ணு
அன்னிதமாகவே அவகேடுதோணுமே
முன்னதாநேருமே முகுந்தனேகாணுமே எ

### லக்ஷ்மி தரு

அண்டத்தையளந்திட்ட நாதாபிரக்யாதா
அருமுனிவார்த்தையை நீதாபாரும்போதா
ஒன்றுஇல்லையென்று உளவாகபேசினனே
சென்றுவாரேனென்று சீராகநகைசினன் அ

### கிருஷ்ணன் தரு

பலகலையுணர்ந்திட்ட முனியேதவமுனியே
பகருவாய்உள்ளதை யினியேநன்றுயினியே
சாலமில்லாமலே சாற்றுவாய்யறிந்திட
நாலேகண்டவாணிபாலகா புரிந்திட பல

### நாரதர் தரு

காண்டீபன்சொன்னதைஐயனே சக்கரகையனே
கதருதேஉரைத்திடமெய்யனே அருள்துய்யனே
தாண்டிதப்புகொட்டும் தாதப்பையனென்றுன்
வேண்டியமத்தடிபட்டவன் நீஎன்றுன் கா

## கிருஷ்ணன் தரு

அப்படி அவன்சொல்ல லாச்சுதாசொல்லாச்சுதா
அறிகுறேன்தீரத்தை போச்சுதாநன்றாய்வாச்சுதா
தப்பிததனஞ்செயன் தகவலும்தெரியாதா
அப்பன்பேர்தெரியாத அர்ச்சுனனல்லவோ அ

## லக்ஷிமி தரு

பார்த்திராபார்த்திரா மன்னவாஎந்தன்மன்னவா
பழிகாரன்சொன்னதை முன்னவாஎந்தன்முன்னவா
கீர்த்தியாய்பஞ்சவர் கினவிலும்மறவார்கள்
பார்த்திபன்மீதினில் பகைநீயும்வையாதீர் பார்

## நாரதன் தரு

வையகம்புகழ்பெற்ற அம்மணிநல்லஅம்மணி
மெய்யானவார்த்தையே னம்மணிநல்லஅம்மணி
தையல்சுபத்திரைஉன்னை தட்டுவாணிஎன்றாள்
ஐயையோஎன்சொல்வேன் அனியாயவார்த்தைகள் வை

## லக்ஷிமி தரு

கட்டுவாரில்லாமல் நாரதாஅடநாரதா அவள்
கடந்ததுதெரியாதோ சீரதாஅப்பாசீரதா
திட்டமாமன்னவர் தேர்விஜயனுக்கு
கட்டியேவைத்தது காசினில்தெரியாதோ க

## கிருஷ்ணன் தரு

பொருபொருபதராதே தேவியேஅடிதேவியே
போய்பார்த்துவருகுவோம் மேவியேஅடிமேவியே
தாருமாருகவே தங்கையைவையாதே
பொருமைகுணமுள்ள அரிவைலக்ஷிமியே பொ

## நாரதர் தரு

சொந்தமனைவியை விட்டுமேநீரும்விட்டுமே
சோரம்செய்தீராம்மாமியை தொட்டுமேநீயும்தொட்டுமே
அந்ததுலுக்கப்பெண்ணை அணைந்துநின்றாராம்
எந்தெந்தவிதமாக எடுத்துமேவைகுறான் சொ

## கிருஷ்ணன் கந்தார்த்தம்

குண்டகஜாதியென்று குவலையமர்ந்திருந்தும்
கண்டதோர்வனத்தில்சென்று காய்கனிதின்றுஜீவர்

துண்டனையிப்போயானும் துரிதமாய்சென்றுகொல்ல
கட்டளைபோலேமீறி,

தரு

சக்கரந்தன்னைஎடுத்தேன் அவனைகொல்ல
மிக்கவேசரங்கள்தொடுத்தேன்

தக்கவேபுகழ்படைத்த தருமர்ஐவருமாள
பக்குவமாய்சென்றுயானும் பதரிடகொல்லுவேனே சக

நாரதர் வேறு தரு

தாத்தாவேகோபம்நீ கொள்ளாதே ஒரு
தந்திரம்சொல்லுவேன் தள்ளாதே

நேர்த்தியானபரி கீர்த்தியேபாருமே
வார்த்தையும்பதராதே வைகுந்தாநாளுமே தா

கிருஷ்ணன் தரு

நீசொன்னவார்த்தையால் நாரதா யிப்போ
நேர்ந்தமேதகோபங்கள்சீரதா

ஏனிந்தகலகங்கள் யிப்படிமூட்டினுய்
ஆகிலும்பெரிதல்ல அஸ்வமேதுவிள்ளுவாய்

நாரதர் தரு

அகிலமெல்லாம்சுற்றிவந்தேனே யிந்த
அஸ்வத்தைக்கண்டு மகிழ்ந்தேனே

பகீரதர்மைத்துனு பரந்தாமாஉனக்குமீம
பச்சமேனிவண்ணு உச்சிதம்யிணக்கமே அ

லக்ஷிமி தரு

அழகுள்ளபுரவியும் யேது யிந்த
அரிவையுமறிந்திட ஓது

பவழம்போன்றவாயால் பகருவாய்விபரத்தை
பாரினில்காணனே இதுபோலேஅஸ்வத்தை அழ

நாரதர் தரு

தெய்வலோகபுரவிஅன்னையே யிப்போ
தேடிகொண்டுவந்தேன் முன்னையே

வையகம்காணவே வகையுடன்நீங்களும்
மெய்யாகஒப்புக்கொள்ளுவீர் ஐயனேபோய்வாரேன் தெ

பொது வசனம்

இவ்விதமாக நாரதர் வைகுந்தம்சென்று புரவியை கண்ண பிரானுக்கு கொடுத்துவிட்டு யின்னும் பலவிதமான கலகம்செய்ய வேண்டுமென்று நினைத்திருக்க அதுவேளை அஸ்தினாபுரத்தை யாளப்பட்ட அர்ச்சுனன் தர்பாருக்கு வருகிறவிதங் காண்க.

அர்ச்சுனன் வருகிற கவி

பஞ்சவரில்நடுபிறந்த வீரதீரன்
பாரெல்லாம்கீர்த்திபெற்ற மிகஒய்யாரன்
தஞ்சமெனகண்டவர்கள் என்பாதத்தில்
தப்பாமல்சேவித்து வணங்கிநிற்க
கொஞ்சுங்கிளியேந்திநிற்கு பாஞ்சாலிதன்னை
கோபாலன்தன்னருளால் மாலையிட்டேன்
பஞ்சுபோல்துரியனிட சேனையெல்லாம்
பட்டெனஉயிர்வதைத்த பற்குணன்வருகின்றேனே.

அர்ச்சுனன் தரு

அரவக்கொடியோன்முதல் அவனிடசேனையெல்லாம்
ஆனைத்தும்மடித்கவீரனும் அர்ச்சுனராஜன்
அவனியில்கெடிபெற்ற லோலனும் அர
கட்டாரிசிலைவாளேந்தி மட்டில்லாபணிகள்பூட்டி
திட்டமாகக்குடைகவிக்கவே மந்திரிமார்களும்
சட்டமாகநெருங்கி சூழவே அர
கொட்டிடும்மணிமுரசு வட்டுதிசைதானதிர
கட்டழகிமாதர்கொஞ்சவே எந்தனைகண்டு
கன்னல்மதனனென்று மிஞ்சவே அர
கஞ்சனைவதைத்தகண்ணன் கழலடிமறவாலோலன்
பஞ்சவர்நடுபிறந்தோனும் அர்ச்சுனராஜன்
பாரதம்முடித்தலோலனும் அர

அர்ச்சுனன் கவி

பகையதைத்தீர்த்தோமந்த பரந்தாமன்கிருபையாலே
சுகம்பெறதமயனுக்கு சூட்டினோம்பட்டம்தன்னை
வகையுடன்யிதுகளெல்லாம் வண்மையாய்நடத்திவிட்டோம்
நகையொளிசுபத்திரைமாளிகை நாடியேயேகலாமே.

அர்ச்சுனன் வசனம்

வாரும் மந்திரி! நாமென்ன எனது பகையாளிகளாகிய துரியோதனாதிசளை கண்ணனிட கிருபையால் கருவறுத்துவிட்டோம். எனது அண்ணாவாகிய தருமருக்கு பட்டாபிஷேகமும் முடித்து

விட்டபடியால் பட்டம் தரித்து 15-நாள் ஆகிவிட்டது. ஆகையால் இப்போது எனக்கோ தேவிமார்கள் ஏழு பேர்கள் உண்டு. அதில் காதலுடைய சுபத்திரையைக் காணும்படி யோசனையாயிருப்பது மந்திரிமார்களே.

### பொது வசனம்

இவ்விதமாக அர்ச்சுனன் சுபத்திரையிடம் செல்லும்படி வார்த்தையாட அதுவேளை சுபத்திரை தர்பாருக்கு வருகிறவிதங் காண்க.

### சுபத்திரை வருகிற கவி

வடிவினில்மிகுந்தநல்ல வஞ்சியாளெழுந்திருந்து
சடிதியாய்தாதியோடு சல்லாபமாககூடி
கெடிபெறும்மன்னர்தன்னை கெளிப்புடன்காணுமென்று
பிடியிடைதுவளசுபத்திரை பெண்ணிதோவருகின்றேனே.

### சுபத்திரை தரு

பரந்தாமன்சோதரியாள் பற்குணர்க்குபாரியாள்
பாவைசுபத்திரை வந்தேன் மன்னரைதேடி
பாவைசுபத்திரை வந்தேன்

திறமானஎந்தன்நாதர் திருமணவாராதென்ன
சுருள் தீதில்லாமடதே ஓதுவாய்தெரிய
நீதியைஎனக்கு நிகழ்த்துவாய்அறிய பா

செண்டுமலரைபோலே உருண்டதனம்குலுங்க
வண்டுஎன்தொனிதன்னை கண்டுமனதுஏங்க
சுருள் வள்ளிமணுளன் வெள்ளிவேலைபோல்
கள்ளமில்லாவிழி யில்லைஎன்னைபோல் பா

நக்ஷத்திரத்தைப்போல விசித்திரமாலையாட
தக்ஷணம்தாதியர்கள் தாவிபருகில்நாட
சுருள் தண்டைகொலுசு மெட்டுகள்தன்னை
கண்டமாதர்கள் கலங்குவார்பின்னை பா

எந்தனழகைபோலே பிந்தஉலகிலில்லை
கந்தமணிந்தபெண்கள் கண்டுபுகழ்வார்சொல்லை
சுருள் கற்புக்கரசி என்றுவிளங்கிட
அற்புதமாகவே யாவரும்களித்திட பா

### சுபத்திரை கொச்சகம்

மங்கைஎன்தாதியே மாரனதுகணைகளால்
எங்குமேபதருதே என்மனம்வாடுதே

சிங்காரமாகவே சிற்றிடைவாடுதே
நங்கைஎன்தாதியே நானினிதாளேனே.

## சுபத்திரை புலம்பல் தரு

தாதிமாரே அடி யம்மா அடி யம்மா
தாளாவிரகம் கொண்டே னம்மா கொண்டே னம்மா
காதல்கொண்டேன் நாதர் வரவில்லை அவர் வரவில்லை
கன்னியேயிதுவென்ன தொல்லை பெரும் தொல்லை
கரும்புவில்வளைத்து தாதி அடி தாதி
கன்னியைகஷ்டப்படுத்துரான் மோதி சும்மா மோதி
மாதெதன்னைகஷ்டப்படுத்துவது ஞாயமா யிது ஞாயமா
மாரனேஉன்னிட மாயமா ஐயோ மாயமா தா

## சுபத்திரை கவி

வருத்தங்களாகுதிப்போ வஞ்சியாள்என்னசெய்வேன்
பொருத்தமாய்சென்றுயிப்போ பூவையும்நித்திரைசெய்ய
திருத்தமாய்மஞ்சத்தில் திறமையாய்வீற்றிருப்பேன்
கருத்துடன்கதவைசாற்றி காவலும்புரிகுவாயே.

## அர்ச்சுனன் கவி

பத்தியாய்யருகிருக்கும் பாங்குள்ளமந்திரிமாரே
நத்தியேசுபத்திரைமாளிகை நானுமேவெகுநாளாக
சுத்தமாயேகவில்லை சுருக்குடன்யின்றுநாளில்
உத்தமிதன்னைக்காண உள்ளத்திலெண்ணம்கொண்டேன்.

## அர்ச்சுனன் சிந்து தரு

பற்குணராஜனும்நடந்தேன் சுபத்திரைமாளிகை
பக்ஷமாககாணவேண்டி யிக்ஷணந்தன்னில்
மல்லிகைமுல்லைரோஜா வெகுவித
வெட்டிவேர்பாரிஜாதமும் வீசிடஎங்கும்
பதினைந்துநாளாக என்தேவிதன்னை
பத்தியுடன்காணுமலே சித்தமும்நொந்தேன்
சித்தத்திற்கேற்றதொரு சுபத்திரையை
சீருடனேகாணவே நேரதாய்வாரேன் தந்

## அர்ச்சுனன் கொச்சகம்

மானேமரகதமே மனதுக்கேற்றசெங்கரும்பே
தேனேதிரவியமே தெவிட்டாததெள்ளமுர்தமே
நானேஉன்னைத்தேடி நங்கையரேவந்தேனிப்போ
வானோர்புகழும்மாதே வஞ்சியரேதாள்திறப்பாய்.

### அர்ச்சுனன் தரு

கானமயில்அன்னமே எந்தன்
கட்டழகிசுபத்திரா அட்டியில்லாதோடிவந்து
கதவைதிறப்பாய் சொர்னமே

யேனோஎந்தன்மீதினில் யித்தனைவர்மம்வைத்தாய்
சருள் யேந்திழைமாதே என்னிடம்வருவாய்
வந்துமேஎனக்குநீ ஒருமுத்தம்தருவாய் கான

பச்சைக்கிளிமேலமர்ந்திடும் அந்த
பாவிமன்மதன் கஷ்டப்படுத்துகிறான்
பக்ஷம்வைத் தென்னிடம்பேசுவாய்
அச்சுதன்சோதரியே அரிவைசுபத்திரையே கான

### அர்ச்சுனன் கந்தார்த்தம்

காதலுமதிகமாகி கன்னியையழைத்துப்பார்த்தேன்
பாதகிபேசாதாலே பதருகிறதெந்தன் றிரேகம்
ரூதாகமஞ்சத்தின்மேல் சுபத்திரைநித்திரைசெய்ய
பூதளம்நடுங்கத்தானே,

### தரு

பூட்டையுடைத்துத்திறந்தேன் மாளிகைக்குள்ளே
பூவையைகண்டு மகிழ்ந்தேன்
கட்டழகியாளேமானே காண்டீபன்வந்தேனடி
திட்டமாகவே ஆசையுடன் பேசிமோகந்தன்னை பூட்

### சுபத்திரை தரு

தாதியரேஓடிவாடிஓடிவாடி யிப்போ
தாளைதிறந்துபாரடிநன்றாய்கூறடி
பாதகியாளேநீ பயங்கரமில்லாமல்
வாதையாய்காவலும் வஞ்சியேபுரிந்தாயோ தா

### அர்ச்சுனன் வேறு தரு

ஆசைக்கிசைந்தமானே என்கண்ணேபெண்ணே
ஆத்திரமாநீயேசாதடி
பாசமாகஉன்னைதேடி என்மானேதேனே
பற்குணன்வந்தேனடி

### சுபத்திரை தரு

சண்டாளபடுபாவி அண்ணன்எந்தனண்ணன்
சதிமோசம்செய்தாரே கண்ணன்மணிவண்ணன்
எண்டிசைதன்னிலே என்னையலையவிட்டார்
குண்டுனிபோல்வந்து குலத்தைக்கெடுத்தாரே சண்

O-,892NVP3,KA
N47



### அர்ச்சுனன் தரு

வந்துவெகுநேரமாக என்கண்ணேபெண்ணே
நொந்துமனம்வாடுரேண்டி
உந்தன்மனதுகல்லோ என்மானேதேனே
உத்தமிஎன்முகம்பாரடி

### சுபத்திரை தரு

என்னிடதாதியேவாராய் இங்குவாராய்யாரோ
எடுத்துவர்னிக்குறுர் பாராய்வந்துகூறுய்
கன்னியரேசென்று கடுகவேபாரடி
மன்னர்வந்தாலே மர்மமாய்வருகுவாய் என்

### அர்ச்சுனன் தரு

தசரததராஜகுமாரா என்ற மெட்டு பின்முடுகு

எத்தனைநேரமாகதேவி உனைதாவி
எனதாவிவந்தேன்தேவி அடி
பத்தினியேவந்துயிப்போ முத்தமதுதந்தருளும்
பத்தினியித்தருணம் உத்தமன்நிற்குதேண்டி எ
பஞ்சணைதனக்குசென்று கொஞ்சிபேசிடுவோம்
அஞ்சலிநீசெய்திடாமல் வஞ்சியாளேவந்திடுவாய் எ

### சுபத்திரை வசனம்

ஆ சகிகாள்! வார்த்தையாடுவதைப் பார்த்தால் என் மணவாளரைப்போல் காணப்பட்டது. ஆனல் சென்று பாதாம்புயகமலம் சேவிப்போம் சகிமாரே.

### சுபத்திரை தரு ஷ்டி மெட்டு

வீரதீரமுமுள்ளநாதா அருள்போதா
பிரக்யாதாஎந்தன்வேதா வெகு
வேண்டியமலர்கள்கொண்டு ஆண்டவனீசுபத்திரை
காண்டாவனமெரித்த கர்த்தனேஉன் தாளில்போற்றி வீ
அத்தனிடபாதங்காண உத்தமரேநீரும்சென்று
பத்தியுடன்தவம்செய்து வெற்றிபெறகணேபெற்ற வீ

### அர்ச்சுனன் வேறு தரு

103814

பாதம்போற்றிசெய்தமாதே யிங்க
பாரினில்வாழ்குவாய்யிப்போதே
ஏதுக்குயித்தனைநோமாய் பேசாமல்
வாதுகள்செய்தாயே ஸர்மத்தைத்கூறடி பா



... ARCHIVES LIBRARY ... EGMORE, MADRAS

சுபத்திரை தரு

பதினைந்துநாளாகநாதா     என்னை
பாராமலிருந்ததால்வேதா
கொதிக்குதுஎன்னெஞ்சம்     கோபாலன்மைத்துனு
பதிதன்னைவிட்டுநீ     பக்குவமாய்செல்லும்     ப

அர்ச்சுனன் தரு

என்னடிசுபத்திராகோபம்     யிப்போ
ஏகமாய்பேசுருய்ஸ்தாபம்
அண்ணன் தர்மருக்கு     அஸ்தினபுரமதை
கண்ணுகபட்டமும்     நான்சூட்டியிருந்தேனே     எ

சுபத்திரை தரு

எந்தெந்தவித்தைகள்தெரியாது     யான்
முந்தியறிவேனேஉன்சூது
தந்திரமாகஎந்த     சிரிக்கிமேலாசையாய்
அந்தமாயிருந்துநீ     ஆசையைதீர்த்தாயோ     எ

அர்ச்சுனன் தரு

பாடுமோசமாகவேபெண்ணே     நீயும்
பலுக்காதேவீண்வார்த்தை என்முன்னே
கொடுமைசொல்லாதடி     கோதையரேஎன்மேல்
விடுவிடுயான்போறேன்     விளம்பாதேயினிசும்மா     ப

சுபத்திரை கவி

விடுவிடுஎன்றுநீயும் விளம்பாதேபிராணநாதா
கொடுமையாய்நினைக்கவேண்டாம் கோதைமேல்கிருபைகூர்ந்து
வடிவினில்சிறந்தமன்னு வாசனைகளபம்பூசி
சடிதியாய்சயனம்செய்ய சம்பரமாய்வந்திடாயே

அர்ச்சுனன் தரு

அதிரபேரிகை மூரசுவாத்தியம் என்ற மெட்டு

மதனும்ரதியைபோல்யிருவர்யிருந்து     ஆடுவோம்யின்பம்தேடுவோம்
அதனசுகவதனசிங்காரி     அறிகுவோம்சுகம்தெரிகுவோம்
சதமானசப்ரமகூடந்தன்னிலே     வருகுவாய்தருகுவாய்
மிதமில்லாமலர்ஏகமாய்தூவியே     அமரலாம்சற்றுஉட்காரலாம்

சுபத்திரை தரு

மனதுபோலவேஉணவுதந்திடும்     மாரனேஜெயவீரனே
யினமானவாசனைகளபம்சாந்துகள்     வீசினேன்மாதுபூசினேன்
குணமாய்வந்துமே     முத்தம்தாருமே
கனமுடன்மஞ்சளிப்பாய்சென்றுமே     காணலாம்காணலாம்

பொது வசனம்

இந்தப்பிரகாரமாக அர்ச்சுனனும் சுபத்திரையும் சந்தோஷ வார்த்தையாடியிருக்க அதுவேளை நாரதர் வருவது.

நாரதர் தரு

அர்ச்சுனன் தன்னையே ஆவலாய்காணவே
அஸ்தினுபுரந்தன்னை நாடினேனே யிப்போ
ஆனந்தசந்தோஷமோடுதேடினேனே
அண்டத்தையளந்திட்ட ஆதிமால்காண்டீபன்
அன்புடன்யிருவருக்கும்மூட்டுவேனே கலகம்
அலங்கோலமாகவாடநாட்டுவேனே

நாரதர் கவி

அருமையென்சிஷியாவாரும் ஆவலாய்நீங்களோடி
தருமர்க்குநடுபிறந்த தனஞ்செயன்தன்னைக்கண்டு
சுருதிநூல்தனையறிந்த சூக்ஷமாய்நாரதர்தான்
பெருமையாய்வந்தாரென்று பிசகில்லாமல்நீகூறிடாயே.

அர்ச்சுனன் சரண தரு

விரிந்தமார்பும் மறையுரிபோர்வையும் என்ற மெட்டு

சரணமே திருவடி தருணமே பணிந்தேன் முனிவோரே
இருகரம்கூப்பினேன் எந்தனைக் காரருள் புரிவீரே ச

நாரதர் தரு ஷை மெட்டு

பாதமேதொழுத பற்குண சுகமுடன் எந்நாளும்
ஆதாவாகவே அஸ்தினு புரியாள் யின்மேலும் பா

சுபத்திரை தரு

மகத்துவமுயர்ந்த மாமுனி யோரே பணிந்தேனே
மர்மமில்லாமலே மாதுக்கு அருள்புரி யினிதானே ம

நாரதர் தரு

மலரடிபணிந்த மாது சுபத்திரா நலமாக
வளமையாகவே வாழ்ந்திரு புவிதனில்சுகமாக ம

அர்ச்சுனன் கவி

மண்பெண்ணாசைநீக்கி மாமுனியோரேதாங்கள்
வண்மையாய்வரும்காலங்கள் வகையுடன்அறிந்தஞானி
தண்மையாய்என்னைநாடி தான்வந்தசேதிதன்னை
உண்மையாய்எந்தனுக்கு உரைத்திடுமறியத்தானே.

நாரதர் தரு

உண்மையைசொல்லவும்அர்ச்சுன னைக்ரு
உளருதேதாவதுபற்குண

எண்ணத்திலிருப்பதை எடுத்துஉரைக்கவும்
குண்ணுதேமனமெல்லாம் கொடுமையைதெரிவிக்க உ

அர்ச்சுனன் தரு

கொடுமையென்றுசொன்னமுனிவரே அதை
கூறுவாயறிந்திடபெரியோரே
தடுமாருதேமனம் தாமோதரன்போரா
சடுதியாகஓதும் சபையறிந்திடசிரா கொ

நாரதர் தரு

தட்டுவாணிபையன்என்றுமே உன்னை
தாத்தாவும்யேசினுர்யின்றுமே
மட்டமதியில்லா பொட்டைமாரிளன்றார்
சட்டெனகேட்டுயான் திட்டமாய்வந்தேனே த

சுபத்திரை தரு

உளவாகநாரதர்மன்னவா வந்து
ஓதினுர்கலகத்தைமுன்னவா
கலமானமன்னவா நாரதர்வார்த்தையும்
பெலமாகநினையாதே பிரியம்உன்மேலாச்சே உ

நாரதர் தரு

அர்ச்சுனன்தேவியேகேளுமே அந்த
ஆதிலக்ஷிமிவார்த்தையிக்காளுமே
பாரோரறிந்திட பரியாசமாய்உன்னை
சீரில்லாஇடகுலசிறுக்கி யென்றுசொன்னதே அ

அர்ச்சுனன் தரு

பத்தினிசுபத்திராவாரும் முனிவர்
பகர்ந்தவார்த்தையதைபாரும்
குற்றமாகஎண்ணி கோதையேவாடாதே
உற்றதைதெரிவித்தேன் புத்தியுள்ளமாதே ப

நாரதர் தரு

நாராயணசாமிபாட்டு யிந்த
நானிலம்புகழ்ந்திடகேட்டு
தாராளமாகவே தவமுனி வார்த்தையை
சீராகசொல்லினேன் சிந்தைகளிப்பாக நா

சுபத்திரை தரு

வீரப்பன்பாட்டோருசீரு நீயும்
விருப்பமாயுள்ளதைக்கூறு

நேராகசென்றுமே பூர்வத்தைதகாணுவேன்
தாராளமாகவே தவமுனியேபுல்லுவாய் வி

நாரதர் தரு

சதுரங்கசேனைக்குஅறியாமல் தாவி
சடங்குசெய்யவகைதெரியாமல்
வதுவைசெய்யாமலே வனத்தில்கொண்டுஉன்னை
மெதுவாகசேர்ந்திட்ட மிககள்ளிநீயாமே ச

சுபத்திரை தரு

ஆகட்டும்மாகட்டும்நாரதா யிப்போ
அறிகுறேனவள் தீரம்சிரதா
போகட்டுமிப்போது பொல்லாதசிரிக்கியை
வேகமாகசென்று விபரத்தைஅறிகுறேன் ஆ

நாரதர் தரு

அன்னைஒருத்தியாம்உனக்குமே மொத்தம்
ஐந்துபேர்தந்தையாம்கணக்குமே
வெண்ணையுண்டமாயன் விண்ணனம்பேசினர்
சின்னபின்னமாக என்னென்னமோசொன்னர் அ

அர்ச்சுனன் தரு

மாடாடுமேய்த்ததும்தெரியாதா யிந்த
மண்டலமெங்குமறியாதா
வடுவெண்ணை தயிர் யேகமாய்திருடியே
நாடுஞ்சிரித்திட நாணமடைந்தானே மா

நாரதர் கந்தார்த்தம்

குந்தியின்சுதனேகேளாய் கூறுவேனுந்தனுக்கு
நந்தனும்சொன்னவார்த்தை நாணங்களாகுதிப்போ
அந்தமாய்பாஞ்சாலிக்கு ஐந்துபேர்புருஷராமே
பந்தமாய்உங்களைப்போல்,

தரு

பஞ்சிபஞ்சவர்என்றுமே கண்ணனும்உங்களை
பரியாசம்செய்தார்யின்றுமே
கானகமெல்லாந்திரிந்த கள்ளப்பயல்களென்று
ஈனமானம்போகவே எடுத்துசொன்னூரேஉன்னை ப

அர்ச்சுனன் கந்தார்த்தம்

எப்படிஎன்னைப்பழித்து எளிதம்செய்வானந்த
தப்பிதயிடையன்வாழ்வு தானினி அறிந்திருப்பேன்

கொப்பெனகம்சன் தானுங் கொல்லுவானென்றெண்ணி
நுப்புடன்யிரவிலாயர்பாடி,

தரு

ஓடிவளர்ந்தவனுச்சுதே யிடச்சிவீட்டில்
உலகம்பழித்திடலாச்சே
வாடிடஅவனுயிரை வாங்குவேன்யினிசென்று
ஈடில்லா அஸ்திரங்கொண்டு எமபுரம்சேர்த்துவாரேன் ஓ

நாரதர் வேறு தரு

பற்குணுபதராதேவாருமே யிப்போ
பக்குவம்சொல்லுகிறேன்தேருமே
இக்கெல்லாம்பேர்பெற்ற தேர்விஜயாயானும்
அக்கரையாயுனக்கு அஸ்வம்கொண்டுவந்தேன் ப

அர்ச்சுனன் தரு

முனிவரேயிதுஎன்னபேச்சி நீயும்
மொழிந்தாயேகலகமும்சீசீ
அனியாயம்சொல்லாதே அருந்தவமுனிவரே
துணிவான அஸ்வத்தை துருசாககாட்டுமே மு

நாரதர் தரு

பரிதனைபிடித்துநான்வருக அந்த
பரந்தாமன்கண்டின்பம்பெருக
சரியில்லைஉனக்கென்று சாமளரூபனும்
துரிதமாய்பிடித்துமே துரத்தினார்வந்தேனே ப

அர்ச்சுனன் தரு

எப்படிபிடித்திட்டான்போதன் அவன்
என்தீரமறியாமல்தாதன்
யேப்புமாப்புகூட்டி யேமாத்திஉந்தனை
காப்புக்கட்டிக்கொண்ட கண்ணனைவிடுவேனோ எ

சுபத்திரை தரு

அண்ணனைகுறைவாகசொல்லாதே யிந்த
அருமுனிசொல்கேட்டுதுள்ளாதே
மன்னவாசென்றயான் மார்க்கத்தைஅறிகுவேன்
பின்னமில்லாமலே பிரியமாய்விடைதாரும் அ

சுபத்திரை வசனம்

வாரும் மன்னவா! நீர் வீணாக அவசரப்படவேண்டாம். நான் என் அண்ணனிடம் சென்று தெரிந்து வருகிறேன் நாதா.

அர்ச்சுனன் வசனம்

ஆனால் சென்றுவாரும் சுபத்திரா.

நாரதர் வசனம்

கேளும் அர்ச்சுனா! அம்மா சுபத்திரா! யான் வந்து வெகுநேரமாச்சு சென்று வருகிறேன். நீங்கள் சென்று எந்தவிதமாவது அந்த அஸ்வத்தைக் கொண்டுவாருங்கள்.

பொது வசனம்

இவ்விதமாக நாரதர் அஸ்திஞபுரம்சென்று அர்ச்சுனனிடம் வேண்டிய கலகம் செய்துவிட்டு மறுபடியும் இன்னும் வேணதிருக்கு செய்யக்கருதி நாரதர் வைகுந்தத்தைநாடி வருவது. அந்த சமயத்தில் மகாவிஷ்ணு ஏதென்று சொல்லுவது.

கிருஷ்ணன் தரு

சோமசேகரனருளும் பாலாவேலா என்ற மெட்டு

ஆசைலக்ஷிமிநேசாபரி பாரும்பாரும் யிந்த
அழகைபோலேஎங்குமில்லை தேரும்தேரும்

லக்ஷிமி தரு

பார்க்கக்கண்கள் கூசுதிப்போ நாதாநாத யிந்த
பரியைபோலேபார்த்ததில்லை போதாபோதா

கிருஷ்ணன் தரு

தெய்வலோகபுரவியாச்சே மாதேமாதே பேரன்
தேடிவந்துகொடுத்ததாச்சே கோதேகோதே

லக்ஷிமி தரு

ஆனால்சந்தோஷமாச்சு நாதாநாதா யிப்போ
அஸ்வத்தைசவாரிசெய்வோம் நீதாநீதா

கிருஷ்ணன் கவி

வஞ்சகமில்லாபெண்ணே வகையுடன்நீயுமிப்போ
நெஞ்சினில்நினைத்தாப்போலே நேரிழையாளே நாமும்
கொஞ்சியிருவருங்கூடி குணமுடன் பூங்காவுக்கு
தஞ்சமாய்விடியற்காலம் தப்பாமல்யேகலாமே

கிருஷ்ணன் வசனம்

வாரும் லக்ஷிமி! உன் எண்ணத்தின்படி நாளைய விடியற்காலம் புரவிமீதிலமர்ந்து நந்தவனம் யேகுவோம் லக்ஷிமி.

நாரதர் தரு

ஓடிவந்தேனே தாத்தா ஓடிவந்தேனே யிப்போ
ஓட்டமும்நடையுமாக ஓடிவந்தேனே

தேடிவந்தேனே உன்னை தேடிவந்தேனே உந்தன்
திருவடியைக்காணும்படி நாடிவந்தேனே

கிருஷ்ணன் வேறு தரு

வந்ததோர் சேதிஎன்ன சந்தகங்களில்லாமலே
வையகமெல்லாம் சுற்றும்நாரதா யிப்போ
வண்மைதனையேசொல்லும்சிரதா

நாரதர் தரு

வந்தவிபரம்தன்னைசந்தேக மில்லாமல்கேளும்
வையகமளந்தமூர்த்தியே உந்தனைதேடி
வாள்விசயன்வாரான்கீர்த்தியே

லக்ஷிமி தரு

கீர்த்தியானகாண்டீபனும் நேர்த்தியாகவந்தாலென்ன
வார்த்தைகளாடவேண்டுமே நடக்கும்சேதி
பார்த்துமகிழ்வோமின்றுமே

நாரதர் தரு

மங்கையந்தசுபத்திரை மானபங்கம்சொல்லிருக்க
சங்கைவெட்கமில்லையா உங்களுக்கின்னும்
சாதிப்பதும்தொல்லையா

கிருஷ்ணன் தரு

பங்கமில்லாமலேபேடிபையன் யிங்ஙனமேதேடிவந்தால்
பொங்குமுடன்யான்மதிப்பேனே அவனுடனே
புகழ்ந்துவார்த்தையாடுவேனே

நாரதர் தரு

பச்சைநிறமேனியனும் உச்சிதமாய்சொன்னதாலே
மெச்சியேமனங்களித்தேனே கண்ணன் தங்கை
இச்சமயம்வாராள்சொன்னனே

லக்ஷிமி தரு

மானங்கெட்டசக்காளத்தி ஏனோயிங்குவந்திடுவாள்
மார்க்கமும்வைப்பதில்லையே அவர்களைக்கண்டால்
தீர்க்கமாகவாரும்தொல்லையே

நாரதர் வசனம்

ஆனல் சேளும் பாட்டி! அந்த சுபத்திரை உன்னை வேண்டிய துன்மார்க்கமான வார்த்தை சொல்லியிருக்கிருள். ஆகையால் நீ அவள் வந்தால் பேசவேண்டாம். பாட்டி தாத்தா உங்களை அந்த அர்ச்சுனன் அதற்குமேல் வேண்டியவித்தியாசமாக பேசியிருப்பதால் நீரும் அவாளிடத்தில் வார்த்தையாடவேண்டாம். யான் சென்றுவருகிறேன் விடைதாரும் தாத்தா.

கிருஷ்ணன் வசனம்

நல்லது சென்றுவாரும் நாரதா.

பொது வசனம்

இவ்விதமாக நாரதர் மகாவிஷ்ணுவிடம் வந்து அர்ச்சுனன் மீது பொறுமையாய் உன்னை வேண்டிய குறைவான வார்த்தை சொன்னானென்று .தெரிவித்து கலகத்தைமூட்டி பேசவேண்டா மென்று திட்டம்செய்துவிட்டு செல்ல, அதுவேளை சுபத்திரை தன் தமயனையும் நாத்தியையும் காணும்படி துவாரகாபுரி நாடி வருவது.

சுபத்திரை தரு

மன்னவர் தானுரைக்க யிந்த    மங்கைசுபத்திரை தானெழுந்து
அண்ணனார் தன்னைகாண யிப்போ    அன்புடன் தானடந்தேன்
என்னையிகழ்ந்துபேசும் அந்த    யிதங்கெட்டலக்ஷிமியை
சின்னப்படசெய்யவே யிப்போ    சீக்கிரம்தானடந்தேன்
உன்னி தபட்டுடுத்தி யானும்    உல்லாசமாகநடந்து
கன்னியர்சூழ்ந்துவர நல்ல    காரிழைதானெழுந்து
யின்னிமிஷந்தன்னிலே அதை    யேகியேகாணவேண்டி
பின்னங்களில்லாமலே யிப்போ    பிரியமதாய்நடந்தேன்

சுபத்திரை வேறு தரு

பண்டாரமாம்ஞான பண்டாரமாம் என்ற மெட்டு

அண்ணியரே அருமை    அண்ணியரே
அண்ணன் தனக்குவாய்த்த    அண்ணியரே
ஆவலாய்சுபத்திரை    மேவியேவந்தேன்
தாவியேஉன்னிரு    தாளடிபணிந்தேன்    அ

கிருஷ்ணன் வேறு தரு

கோவர்த்தனகிரியை    குடையாகப்பிடித்தவர் அந்த
கோகுலமாதரைகுண    மாககார்த்தவர்
தசரதர்தனக்குநான்    சிசுவதாய்வந்தவர் வெகு
தரணியில்சூரரைமிதமில்    லாமல்மடித்தவர்    கோ

சுபத்திரை ஷெடி மெட்டு

தமையனாரேஎந்தன்தமையனாரே    தங்கையாள்
வாடலானேன்    தமையனாரே
தாரணியளந்த    வாமனரூபா
பூரணமாய்பொன்    னடியதுதொழுதேன்    த

லக்ஷிமி தரு

எங்கும்நிறைந்திட்ட    யீசர்தனக்குதங்கை
மேகவண்ணனேயானும்    உந்தனிடமங்கை

மங்களமாகவே மலர்சொரியநங்கை
சிங்காரமாகவந்து நீட்டுராள்உன்தங்கை எ

சுபத்திரை வேறு தரு

ஆளனைமயக்கிடும் கள்ளியே அடிகள்ளியே
அரிவையெனைமதிக்க வில்லையே யிதுதொல்லையே
எளிதமாகவே எந்தனை நினைத்தாயே
தாளாகோபங்கொண்டு தள்ளினேன்பாரடி ஆ

லக்ஷிமி தரு

வாடிபோடியென்று பேசாதே அடிபேசாதே
வையகதாசிபோல் வீசாதே கையைவீசாதே
யீடில்லாவார்த்தைகள் என்னிடம்நீட்டாதே
இடகுலப்புத்தியை மிப்பவும்காட்டாதே வா

கிருஷ்ணன் தரு

சண்டைகள்போடாதே தேவியே அடிதேவியே
சகலரும்நகைப்பாரே மேவியே அருளாவியே
கண்டபடிதங்கா கலங்கித்தவிக்குதே
காணுதமொழிபெண்ணே வீணுகவிளம்பாதே ச

லக்ஷிமி தரு

தங்கைமேல்பக்ஷத்தை வைத்துமே மன்னுவைத்துமே
தாமோதராசொல்லும் ஒத்துமே நீங்களொத்துமே
எங்கிலும்காணேனே யிதுபோலஞாயமும்
அங்கமும்வாடியே அனலாயெரியுதே தங்

கிருஷ்ணன் தரு

கோபம்கொள்ளவேண்டாம்மங்கையே எந்தன்மங்கையே
கோபாலன்சொல்லைக்கேள் தங்கையே அருமைதங்கையே
தாப்ரியமானதோர் தையல்லக்ஷிமியே
தர்ப்பரனுரிட தங்கைமனந்தானும் கோ

சுபத்திரை தரு

கொண்டதேவிபேச்சே மேலாய் அவர்மேலாய்
குறையதுசெய்தாரே நாளாய் இந்தநாளாய்
கண்டோர்சிரித்திட கன்னியாளெந்தனை
வண்டனிசிறுக்கியை வஞ்சியாள்விடுவேனோ கொ

லக்ஷிமி தரு

தாசிபோலேகையை நீட்டாதே வந்துநீட்டாதே
தளுக்குகுலுக்குமே காட்டாதே சும்மாகாட்டாதே
காசுபறித்திடும் வேசியேநீபோடி
வீசாதேயினிசும்மா விபசாரிநீயல்லோ தா

### சுபத்திரை தரு

ஆண்டிசாதியென்று தெரியும் போடிதெரியும்
அகிலபுவனத்தில் அறியும் நன்றாய் அறியும்
பாண்டுரங்கனிடம் பாதகிநீவந்து
வேண்டியசீருகள் விபசாரிபெற்றாயோ ஆ

### கிருஷ்ணர் தரு

அலங்கோலமாகவே தங்கையே அம்மா தங்கையே
அவஸ்தைபடவேண்டாம் யிங்கையே அமரும்யிங்கையே
உலகத்தார்சிரிப்பாரே உற்றுபடாமலே
உத்தமி தங்கையே சித்தம்வாடவேண்டாம் அ

### சுபத்திரை தரு

அண்ணிபேசுவது ஞாயமா அண்ணா ஞாயமா
அதைகேட்கமனம்வல்லை உபாயமாய் அண்ணா உபாயமாய்
உன்னோடுபிறந்ததால் என்னசீரும்பெற்றேன்
கன்னியலையவும் காண்டீபர்க்களித்தீரே அ

### கிருஷ்ணர் தரு

யீனமானமில்லா தங்கையே சீசீ தங்கையே
யிடாரகபேசுறாய் யிங்கையே போபோ தங்கையே
ஏனோயென் தேவிமேல் ஏளிதம்பேசுறாய்
ஏதங்கெட்ட தங்கையே ஏகுவாய்உன்பதி யீன

### சுபத்திரை கவி

படுபாவிஅண்ணன் மாளிகை பாவையாள்யானும்வந்து
கொடுமைகள்சொன்னதாலே குமுருதேவயிறுதானிப்போ
சடுதியாய்நாதனோடு சங்கதிதன்னைச்சொல்லி
அடுத்துமேமன்னராலே அமரதுபுரியசெய்வேன்.

### சுபத்திரை புலம்பல்

மன்னவாஎன்சொல்வேன்மாயன்செய்தகூது பிராணநாதா
சின்னாபின்னமாகசீர்குலையவைத்தார் பிராணநாதா

### அர்ச்சுனன் வேறு தரு முடுக்கு

போனசேதிஎன்னபகலுவாயறிந்திட என்பெண்மயிலே
வீணாய்புலம்பாதே விபரத்தைஓதுவாய் என்பெண்மயிலே

### சுபத்திரை தரு

குன்னுதேஎன்னுள்ளம்கோதையாளென்சொல்வேன் பிராணநாதா
அண்ணனிடதேவிஅடித்துமேவைதாளே பிராணநாதா

அர்ச்சுனன் வேறு தரு முடுக்கு

அண்ணியர்வைத்தது அதுவுமிருக்கட்டும் என்பெண்மயிலே
கண்ணன்சேதிதன்னைமுன்னமேதெரிவிப்பாய் என்பெண்மயிலே

சுபத்திரை தரு

அடிமேலடியடித்து அலங்கோலம்செய்தாரே பிராணநாதா
பிடிவாதமாய்பேசிபோடிவாடியென்றான்என் பிராணநாதா

அர்ச்சுனன் வேறு தரு முடுக்கு

என்னகுறைஉன்மேல்எடுத்துவைதார்கள் என்பெண்மயிலே
சின்னபின்னம்செய்துசீக்கிரம்வருகிறேன் என்பெண்மயிலே

சுபத்திரை தரு

அழகானபுரவியை அருவையும்கேட்டதால் என்பிராணநாதா
இழிவானபேடிக்கிதுவேண்டாமென்றுரைத்தார் என்பிராணநாதா

அர்ச்சுனன் கந்தார்த்தம்

பேடிஎன்றுஎந்தனையும் சொன்னதாலே
 பேய்பாலைஉண்டஅந்த யிடையன்தன்னை
சாடிடுவேன்ரத மீதினிலேறியானும்
 சத்தசாகரங்களெல்லாம் தத்தளிக்க
வாடிடவேனவனுயிரை யின்றுனளில்
 வாங்காமல்விடுவதில்லை என்றுசீரி
ஆடிடவேபம்பாம்போல் நடுநடுங்க
 அண்டமெல்லாந்தத்தளிக்க,

தரு

ஆக்கிரமித்துஎழுந்தேனே அர்ச்சுனராஜன்
சீக்கிரமாய்தொடர்ந்தேனே
போக்கிரிபிடப்பயலே தாக்குவேனொருகணையால்
சீக்கிரம்சிலைவாளேந்தி நோக்குவேனையிந்தருணம் அ

நாரதர் தரு

அவசரப்படவேண்டாம்அர்ச்சுனா யானும்
அறிவிப்பேன்சூக்ஷத்தைதபற்குனா
புவனமறியவே புகலுவேன்நானென்று
கவனமாசுரூபம் கள்ளனைச்செல்லுவாய் அ

அர்ச்சுனன் தரு

கள்ளரூபம்என்றுசொன்னீரே விபரம்
விள்ளுவாயறிந்திடமுனிவரே
உள்ளம்பதருதே உரியேயும்கண்ணனை
மெள்ளவேசென்றுமே கொல்லாமல்விடுவேனோ க

நாரதர் கவி

பார்த்தீபாசொல்லக்கேளாய் பகருவேனுந்தனுக்கு
பூர்த்தியாய்கோபங்கொண்டால் புகழ்பெறகீர்த்தியில்லை
சேர்த்தியாய்நீயுமந்த செடியமாவிடமேபோக
வார்த்தையான்சொல்வதைப்போல் வகையுடன்யேகிடாயே.

நாரதர் வசனம்

வாரும் அர்ச்சுனா! யான்தெரிவிக்கும் வார்த்தை என்னவென்றால், நீரோ நரநாராயணனென்று யாவரும்புகழ பேர் எடுத்தீர். அப்படியிருக்க தாங்கள் வீணாக கோபங்கொண்டால் ஞாயமில்லை. தவிர யான்வந்து உங்களுக்கு கலகம் செய்வதாக நினைப்பார்கள். அதுவன்றியில் உனக்கு கோபம்வந்தால் அதற்கு ஓர் யோசனை யுண்டு. உனது மைத்துனனாகிய கண்ணன் உனக்கு கொண்டுவந்த அஸ்வத்தை திருப்பிகொண்டு உனக்கு கொடுக்ககூடாதென்று யிருக்கிறார். அந்த அஸ்வத்தின்மீதேறிக்கொண்டு நந்தவனசிறப்பை பார்க்கும்படி இருவரும் வருவார்கள். அந்தச்சமயத்தில் உன் மைத்துனரும் அவர்தேவியும் உல்லாசமாக நித்திரை செய்வார்கள். அதுவேளை நீர் ஒரு கள்ளனாகவும், உன் தேவி சுபத்திரை ஒரு கள்ளச்சியுமாகச் சென்று அந்த அஸ்வத்தைப் பிடித்தால் அவர் சமர்செய்ய வருவார். அதுவேளை நீரும் யுத்தம்செய்து உன் கோபத்தையும் தணிவாய். அந்த அஸ்வத்தையும் நீர் கைபற்றி சவுகரியமாகவரலாம் அர்ச்சுனா.

கிருஷ்ணமூர்த்தி கவி

வஞ்சிலக்ஷிமியேகேளாய் வகையுடன்பரிமீதேறி
கொஞ்சியேகூடிநாமும் கோதையேசெல்லவேண்டும்
அஞ்சிடவேண்டாம்பெண்ணே அஸ்வமும்நடக்கும்போது
நஞ்சணிபரமன்தங்கா நலமதாய்யேகுவோமே.

லக்ஷிமி தரு

புரவியைநடத்திடும் பிரியமதாகவே யிப்போ
புண்ணியரேநாமும் செல்லுவோமே அந்த
புகழ்வானநந்தவன யேகுவோமே

கிருஷ்ணன் தரு

நாரதர்தந்திட்ட சிரானபுரவியை யிப்போ
நலமாகத்தட்டியிதோ ஓட்டினேன் அது
நடுங்கிடசவுக்கினால் தட்டினேன்

லக்ஷிமி தரு

குந்தகமில்லா விந்தையாய்புரவியில் யிப்போ
கோதையாளமர்ந்திட்டேன் மன்னவரே நீரும்
கூடிவனமேசெல்வோம் புண்ணியரே

### கிருஷ்ணன் தரு

முன்னதாய்தெரிகுதே உன்னிதவனமது அதை
கண்டுமகிழ்ந்திடுவாய் பெண்மயிலே யானும்
கனத்தசந்தோஷம்கொண்டேன் கருங்குயிலே

### லக்ஷிமி தரு

காக்ஷிகண்காக்ஷியே என்ற மெட்டு

என்னசுந்திரமே யிந்தவனவேடிக்கை
எந்தன்மணவாளரே குந்தகமில்லாபொய்கை எ
என்னிடமனங்களிக்க எங்குமயிலாடுதே
உன்னிதமாய்மானினங்கள் அன்னம்விளையாடுதே எ
கொஞ்சிடும்குயில்பக்ஷிகள் மிஞ்சிராகம்பாடுதே
அஞ்சிடாமல்மந்திகளும் மரத்திலேறிஓடுதே

மந்தாரகோங்குடனேவாசம் அருமை
செந்தாமரைபுஷ்பம்என்னநேசம் யின்னும்
சொல்லபோகுமோபிரகாசம் வெகு
நல்லமல்லிகைமுல்லைபாசம்

மன்னுயிதைப்பாரும் மனங்களித்துதேரும்
மனக்கவலைதீரும் மகிழ்ந்துபதில்கூறும் எ

### கிருஷ்ணன் கவி

சித்தமாவனவேடிக்கை சீருடன்பார்த்துவிட்டோம்
உத்தமிபுரவிமீதில் உன்னிதமாகத்தானே
நத்தியேஅமர்ந்திடாயே நங்கைநாமும்பிப்போ
பத்தியாய்துவாரகைக்கு பாவையேசெல்லுவோமே.

### லக்ஷிமி தரு

பாதம்போற்றுவோம் காந்தி என்ற மெட்டு

சோகமாகுதே மன்னு தாகமிருந்தே
பாகமானஜலமே பக்தாவேநீரளிப்பீர்
வாககளைதெளிந்து வஞ்சியாள்பினவருவேன் சோ

### கிருஷ்ணன் தரு மேற்படி மெட்டு

அன்னமேகேளாய் மனம் / அரிவையேதாளாய்
கன்னியேமாளிசென்று களையதைதீர்க்கலாம்
இந்நிமிஷத்தில்நாமும் ஏகிமனதுய்யலாம் அ

### லக்ஷிமி தரு

ஏங்கிவாடுதே மனது தேங்கிவாடுதே
சோங்குதேதிரேகமெல்லாம் சுத்துதேசென்னியது
நீங்கள்ஜலமேகொண்டு தாங்கள்வருவீர்சொன்னேன் ஏ

கிருஷ்ணன் தரு

எங்குசெல்லுவேன் ஜலமது நங்கையேபுகல்வேன்
திங்களணிந்தோர்தங்கா திறமுடன்வீற்றிருப்பாய்
சங்கையில்லாமலிப்போ ஜலம்கொண்டுவாரேனிதோ எ

கிருஷ்ணன் வேறு தரு

நதியில்யிறங்கியிதோ மெதுவாகஜலத்தை
மொண்டேன் கரத்தில் கொண்டேன்
அதிவிரைவாகவே அரிவையாள்தாகம்தீர
நடந்தேன் யிதோ துடர்ந்தேன்
மாதுலக்ஷிமியர்க்கு தீதுவந்தணுகிடாமல்
மகிழ்ந்தேன் உள்ளம் புகழ்ந்தேன்
விந்தையானநதிசென்று ஜலம்கொண்டுவந்தேன்
பாரும் தாகம் தீரும்

கிருஷ்ணன் கவி

ஜலமதுகொண்டுவந்தேன் சஞ்சலமகற்றயானும்
நலமுடனருந்துவாயே நாயகிசுகிர்தமோடு
கலகமும்சேராமுன்னம் காரிழையாளேநாமும்
பலபலஅடியார்போற்ற பதிதனக்கேகுவோமே.

லக்ஷிமி தரு

பாகமாஜலத்தையானும் பத்தினிதாகம்தீர்ந்தேன்
சோகமும்தீர்ந்துவிட்டேன் சொருசுள்ளபிராணநாதா
யேகமாநித்திரைதானும் யெனக்குமேவருவதாலே
நாகன்மேல்பள்ளிகொண்ட நாதனேவீற்றிருப்போம் ப

லக்ஷ்மி வசனம்

கேளும் நாதா! எனக்கு ரொம்பவும் ஆயாசமாக யிருக்கிறது, ஆகையால் இந்த புஷ்பவனத்தில் சற்றுநேரம் உல்லாசமாக சயனிக்க விருப்பமானேன் நாதா.

கிருஷ்ணன் வசனம்

ஆ! லக்ஷ்மி நல்லது ஆனால் நாம் சயனிக்கும்போது நமது அஸ்வத்தை யாராவது பிடித்துக்கொள்ளுவார். ஆகையால் அதை ஓர் விருக்ஷத்தின் அடியில் கட்டிவிட்டு நாம் சற்று நித்திரை செய்துவிட்டு நமது அரண்மனை செல்லுவோம் லக்ஷிமி.

இருவரும் நித்திரை செய்யும் தரு

நித்திரையாகினரே யிருவர்களும்
நித்திரையாகினரே

நித்திரையாகினார்சுத்த பூங்காவனத்தில்
பத்தினிலக்ஷிமியும் பரந்தாமனுங்கூடி நித்
உல்லாசமாகவேநல்ல விருக்ஷத்தின்கீழ்
சல்லாபமாகவே சயனித்துக்கொண்டேனே நித்

## பொது வசனம்

இவ்விதமாக கண்ணனும் லக்ஷிமியும் பூங்காவனத்தில் அஸ்வத்தை கட்டிவிட்டு நித்திரைசெய்ய அதுவேளை நாரதர் சொல்லிய வார்த்தைபோல் அஸ்வத்தை களவுசெய்யும்படி கருதி அஸ்தினாபுரியாளும் அர்ச்சுனன் நந்தவனத்தில் கள்ளனாக வருகிறவிதங்காண்க.

## கள்ளன் வருகிற கவி

வள்ளலாய்நாரதர்தான் வாக்கதுஉரைத்தாய்போலே
மெள்ளவேஉருவைமாற்றி மேன்மையாய்விசயனிப்போ
கொள்ளைதானடிக்கவேண்டி கோபாலன்பீடத்தைத்தேடி
கள்ளனாய்வேடம்பூண்டு தாண்டவன்வருகின்றேனே.

## கள்ளன் தரு

வந்தேனே அர்ச்சுனராஜன் நல்ல
வையகபுவனமும் பேர்பெற்றபோஜன்
யிந்திரன்சுதனாக வந்தேன் வெகு
யீடில்லாதுரியனிட சேனையைப்பிடித்தேன்

குந்தளகுவலையும்நடுங்க என்பேர்
கூறினாலேகண்ட சூரருமொடுங்க
கைதனில் வில்லம்புயீட்டி தாங்கி
கண்டபேர்பயந்திட கண்களைஉருட்டி

முதுகில் மச்சரேகைமின்ன வெகு
முறைமுறையாய்மாதர் அருகினில்பண்ண
திருட்டுப்பார்வை மிககொண்டு அந்த
திருமாலின் அஸ்வத்தை பிடிப்பேனேயின்று

எடப்பையன்பெருமையைப் பார்ப்பேன் யானும்
எதிராகபோர்புரிந்து என்வஞ்சம்தீர்ப்பேன்
நாரதர்சொல்படி யானும் நல்ல
நாணயமாககள்ளனைப்போல் வந்தேனேகாணும் வந்

## கள்ளன் கவி

என்னிடதோழமாரே ஏவல்செய்மூளிவாயா
சொன்னதுபடியேகேளும் சொகுசுள்ளயிளிச்சமூக்கா
உன்னிதமாகத்தானே ஊளைகண்டுதொள்ளைகாதா
மின்னல்போல்கள்ளச்சிதன்னை மிதமில்லாமல்வரச்செய்வாயே.

### கள்ளச்சி வருகிற கவி

சிவனிடம்அஸ்திரம்பெற்ற சீருள்ளஎனதுமன்னர்
கவனமாயழைத்தாரென்று கன்னியர்பலருங்கூற
தவஞானிதொண்டர்க்கெல்லாம் தான்மோக்ஷம்கொடுக்கும்மாயன்
அவர்டதங்கையான அருவைசுபத்திரைவருகிறேனே.

### கள்ளச்சி தரு

தெற்குமுகமாயிருக்கும் நந்தியைப்பாரா என்ற மெட்டு

பச்சனிறமாகியதோர் அச்சுதன் தங்கை அந்த
மெச்சிடவேகாண்டீபர்க்கு உச்சிதமங்கை
கச்சிதமாய்எந்தன்பேரு கேளுமேசொல்வேன் யிப்போ
காரிழைசுபத்திரையாள் யானும்விள்ளுவேன் ப

அண்ணிசெய் தவஞ்சகத்தை. கண்ணால்கண்டேனே
ஆவலாககள்ளச்சிபோல் ரூபங்கொண்டேனே
மன்னவர் அழைத்தவிதம் தன்னைகாணவே
மகிழ்ச்சியாகவேஓடிவந்தேன் முன்னதாகவே அ

### கள்ளச்சி கவி

கோடவியேவாடிநீயும் கோதையாள்யானுரைப்பேன்
திடமதாய்மன்னர்தானும் தீதில்லாமல்அழைத்ததாலே
தடையில்லாமல்காணவேண்டும் தாதியேகொம்மைகூத்தி
மடமயில்போலேசென்று மலரடிபணிகுவோமே.

### சுபத்திரை சருண தரு

நாதசங்கீர்தபொன் மணிமண்டபம் என்ற மெட்டு

பாதம்பணிகின்றேன் கள்ளநாதா எந்தன் கள்ளநாதா
பாவையையாக்ஷித்தாளும் திவ்யபோதா
தீரவீரமும்பெற்ற திவ்யபோதா

### கள்ளன் தரு

மாதேசுகமாகவாழ்குவாய் - கள்ளபெண்ணே அடி. கள்ளபெண்ணே
மாநிலத்தில்குறைவில்லா கள்ளபெண்ணே
உள்ளம்மகிழ்ந்தேனடி. கள்ளபெண்ணே

### கள்ளச்சி வேறு தரு ஒட்ட மெட்டு

யேழேளையழைத்தீர் ஓநாதாஓநாதா
யேந்திழையறியசொல்வீர்
காணூர்குழலியரும் ஏநாதா கண்டுமகிழும்படி

கள்ளன் தரு மேற்படி மெட்டு

கண்டுகளிப்பேனென்றன் — தேதுஓஓதேவி
காரிழைசுபத்திரையே
செண்டிகழுத்தழகி — சேர்ந்துவிளையாடுவோம்

கள்ளச்சி தரு

விளையாடுவோமென்றால் — ஏனாதா ஆசைநாதா
சாலமில்லாமல்யான்வருவேன்
காலங்கழிக்காமலேயிப்போ — கட்டழகாவந்திடுவீர்

கள்ளன் தரு

வந்திடும்படிக்கிசொன்ன — ஓதேவி ஆசைதேவி
வஞ்சிசுபத்திரையே
இந்தகள்ளரூபத்தை — ஓதேவியினிஎங்கும்சொல்லாதடி

கள்ளன் கவி

அட்டில்லாஎன்னதோதேவி அன்னமேசொல்லக்கேளாய்
திட்டமாசேர்ந்துவிட்டோம் தீதில்லாசுபத்திரையாளே
சட்டமாமாயன்றிரம் சமர்த்ததையறியவேண்டும்
பொட்டெடன அஸ்வம்தன்னை போயதைப்பிடிக்கலாமே.

கள்ளன் தரு தெம்மாங்கு மெட்டு

உன்னிதமாககள்ளப்பெண்ணே — உலகமெல்லாம்சுற்றிப்பார்த்தேதாம்
இன்னதோர்களவுஒன்றும் — சேயிழையேகிடைக்கவில்லை
சித்தம்வாடிபெண்ணே — சிதறுதடிகண்ணே உ

கள்ளச்சி தரு மேற்படி மெட்டு

சித்தம்கலங்கவேண்டாம் — சீருள்ளஎன்மன்னவரே
பத்தினியாள்பார்க்கும்போது — பாகமானநந்தவனம்
உத்தமரேயிங்கு — உடனேசெல்வோம்அங்கு சித்

கள்ளன் தரு

அங்குசெல்வோமென்றுரைத்த — ஆவலானகள்ளமாதே
இங்கிர்தமாஅஸ்வம்தன்னை — யேந்திழையேபாருமடி
என்னவெகுஅருமைநாம் — ஏகிபிடிப்போம்பெருமை அ

கள்ளச்சி தரு

பெருமையாயிருப்பதென்று — பேசவேண்டாம்சப்தம்போட்டு
ஒருவருமறியாமலே — ஒதுங்கிருந்துபிடித்துவாரும்
ஓட்டமாகஓடி. — யிருவர்போயோம்கூடி பெ

கள்ளன் கந்தார்த்தம்

பக்ஷமாய்அஸ்வந்தன்னை பார்த்துமேமனங்களித்தேதன்
லக்ஷணமானதேவி லகுவாகமுந்தியேகும்

தக்ஷணம்நித்ரையாரோ தானதுசெய்யும்வேளை
இக்ஷணமறியாமுன்னம்,

தரு

எகியேயானும்நுழைந்தேன் அஸ்வத்தையிப்போ
எகிறிகயிற்றைப்பிடித்தேன்
மகிமையாய்என்களவை மாயனுலறியப்போமோ
சுகிர்தமாயித்தருணம் சூரத்தனமாகசெல்வேன் எ

கிருஷ்ணன் கவி

நித்திரைபுரிந்துவிட்டோம் நீறணிபரமன் தங்கா
நத்தியேஅவஸ்வம்தன்னில் நலமுடன்யிருவர்கூடி
பத்தியாயமர்ந்துநல்ல பார்ப்பவர்மனங்களிக்க
சித்தமாயரண்மனைக்கு சீருடன்யேகலாமே.

லக்ஷிமி தரு

ஐயையோமன்னவா வாருங்கள் யிப்போ
அஸ்வத்தைக்காணோமே பாருங்கள்
நையுதேயென்மனம் நானினிஎன்செய்வேன்
வையகமளர்ந்திட்ட துய்யபொற்பாதனே அ

கிருஷ்ணன் தரு

இதுவென்னபுதுமையோ தேவி யிப்போ
என்மனம்வாடுதே ஆவி
மெதுவாகவந்திட்ட மேலானதிருடனை
பதமாககொண்டுவந்து அதம்செய்துகொல்லுவேன் இ

லக்ஷிமி தரு

உத்தமநாதரே வாருமே அதோ
ஓடுகிறான்சீக்கிரம் நேருமே
குற்றம்செய்யவந்த கொலைக்காரத்திருடனை
சித்தம்வாடிசாக சீக்கிரம்கொல்லுங்கள் உ

கிருஷ்ணன் தரு

போகாதேபோகாதே நில்லடா யானும்
புலத்தையறிவேன்பதில் சொல்லடா
வேகமாய்வந்தாயோ விதத்தையறியாமல்
சாகவேஉயிர்போக சண்டாளாஅடிப்பேனே போ

கிருஷ்ணன் வசனம்

அடே திருடா நீ யார்? உன் பேர் சொந்த ஊர் அதுகளை நன்றாய் என்னிடம் கூறுவாய்.

கள்ளன் புலம்பல் தரு

அடிக்காதீர்அடிக்காதீர் துடிக்குதேதேகம்
மடிக்குரேனென்றதால் நடுங்குதேஎன்உள்ளம்

சரணம் மங்கைதேவியாள் எங்குதேடுதோ
அங்கமபதரியே அலரிவாடுதோ அடி

கிருஷ்ணன் வேறு தரு

அழுதாலும்விடுவேனோ திருடா உந்தன்
அரிவைஎங்கேசொல்லும்முரடா
பழுதுசெய்யவந்த பதட்டமானபேயா
விழவிழஉந்தனை வெட்டுவேன்யிருதுண்டா அ

கள்ளச்சி புலம்பல் தரு

என்னநான்செய்குவேன் மன்னனைகாணுமல்
குண்ணுதேஎன்வயிறு கொதிக்குதேஉள்ளமும்
சரணம் கோதையாள்மனம் வாதையாகுதே
பாதைதேடியே தோதாலக்தேனே எ

லக்ஷிமி வேறு தரு

வல்லவரேஅதோபார்த்தாயா அந்த
வஞ்சியழுவதுநேர்த்தியா
புல்லெனவேசென்று மெல்லியைக்கொண்டுவர
அல்லல்வரும்படி அடித்துதுரத்தலாம் வ

கிருஷ்ணன் தரு

முன்னேவிட்டுவந்தமட்டியே யிப்போ
மோதியடிக்குரேன்கெட்டியே
கன்னம்செய்யவந்த கசடரோநீங்களும்
சின்னுபின்னமாக சிதைத்துயிர்போக்குவோம் மு

கள்ளச்சி புலம்பல் தரு

முன்னும்பின்னும்பாராமல் கன்னியிவ்விடம்வந்து
சின்னபடவுமானேனே சிவசிவாஎன்செய்வேன்
சரணம் சிந்தைவாடியே நந்தவனம்தனில்
நொந்துவித்திட எந்தன்விதியோ மு

லக்ஷிமி வேறு தரு

கள்ளசிரிக்கியே வாடி அடி வாடி யிப்போ
மெள்ள அழுகிறாய் போடி சீசீ போடி
வள்ளலாய்வந்துமே வஞ்சியேசிக்கினாய்
துள்ள துள்ளஉன்னை துடிக்கவேசெய்குவேன் க

கள்ளன் புலம்பல் தரு

பெண்பாவமல்லவோ பிதரிடஅடிக்காதீர்
தன்னன்தங்கைபோலே கன்னியும்வளர்ந்தவள்

சுருள் கலங்கியழுதிட கட்டியடிக்காதீர்
கலங்கிவாடிய சும்மாவிட்டாதீர் பெ

### கிருஷ்ணன் வேறு தரு

இருவரையும்கூட்டிவிட்டேனே யானும்
ஈடில்லாகாலாலுதைத்திட்டேனே
மறுமொழிபேசாமல் மார்க்கமாயிருந்திடும்
தருணமேஉங்களை தாக்குவேன்யின்றைம் இ

### கள்ளன் புலம்பல் தரு

குத்தினகுத்தால்ரத்தம் குடம்கொண்டுசாயுதிப்போ
கொடுமைக்குஎன்னசெய்வேன் தெய்வமே
சித்தம்கலங்கிவாட சிதைக்குரார்எங்களையும்
சிவசிவாஎன்னசெய்வோம் தெய்வமே

எந்தன்மனதுக்கேற்ற சுந்திரமேஎன்தேவி
சிந்தையுருகலானேம் பிராணதேவியே
இந்தபுரவிதன்னைஎந்தன் கண்ணால்பார்க்கவில்லை
குந்தகுந்ததள்ளுகின்றார் தெய்வமே கு

### கள்ளச்சி புலம்பல் தரு ஜம்பை

விட்டுவிடும்ஓடிப்போரோம் தொட்டடிக்கவேண்டாம்சுவாமி
கட்டழகன்செய்தபிழை கர்த்தனேபொறுத்தருள்வீர்
பொட்டெனப்புரவிதன்னை திட்டமாகக்காணவில்லை
அட்டியில்மன்னவமே ஆவியும்பதறுதிப்போ

### கள்ளன் கந்தார்த்தம்

மதிமுகஎனதுதேவி மார்க்கமாய்வார்த்தையொன்று
கொதிக்குதுஎனதுஆவி கோதையேபொறுத்திருந்தேன்
சதிருடன்சுயரூபத்தை சம்ப்ரமாஎடுத்தேன்யிப்போ
அதிவிதகண்ணன்தன்னை.

### தரு

ஆவிபதரவாட்டுவேன்நல்ல அண்டரண்டபகிரண்டம்நடுங்கிட
மேவியென்தீரம்காட்டுவேன்
பாவியிடையயேலஉன் தேவியுடனேகூடி
தாவியெனையடித்தாய் தாதையையலேபோடா ஆ

### கிருஷ்ணன் கந்தார்த்தம்

ஆரடாஎன்னிடத்தில் அதம்பியேபேசவந்தாய்
பாரடாஉன்னையானும் பரகெதிசேர்க்காவிட்டால்
கூரடாயிங்குவந்து குதிரையைதிருடிக்கொண்டு
சேரடாதும்சம்செய்ய,

தரு

சித்திரகணைகளெடுத்தேன் உந்தனைக்கொல்ல
சிதாபதாவிடுத்தேன்
அத்திமுகன்சுப்ரமண்யன் யாவர்வந்தெதிர்த்தபோதும்
தத்திதலையுருள வெற்றிபெறுவேன்பாராய்
சுருள் தாக்குவேன் உயிர்போக்குவேன்
தாக்..வேன் கணைநோக்குவேன்
துண்டனேஎன்னெதிரில் சண்டைசெய்யவந்தாயோடா
செண்டுபோலேதூக்கிஉன்னை மண்டலத்திலெறிவேனே சி

அர்ச்சுனன் கந்தார்த்தம்

சட்டங்கள்பேசவேண்டாம் சதிகாரமூடாநீயும்
திட்டமாய்வார்த்தையாடி தீதில்லாபிழைத்தாலாச்சு
அட்டில்லாமல்மீறிவந்தால் அதிம்பிடும்புலிபோலிப்போ
கட்டாயம்உன்னையிப்போ,

தரு

கண்டித்துதள்ளுவேன்பாராய் வாளாயுதத்தால்
துண்டித்துதள்ளுவேன்நோராய்
வண்டணிபாமனுரும் யந்தெதிர்த்தால்விடுவேனே
கொண்டவிடிபோலேபாணம் கும்பல்கும்பலாய்விடுத்தேன்
சுருள் கொல்லுவேன் உனைவெல்லுவேன்
சொல்லுவேன் யிப்போபுல்லுவேன்
சோமாறியிடையனே பூமாரிபொழிவதுபோல்
தாமதமில்லாமல் தாக்கினேன்சரமதை கண்

கிருஷ்ணன் கந்தார்த்தம்

இடையனென்றுநீயும்யென்னை யெளிதம்பேசவந்தாய்
மடையாந்தபஞ்சவர்போல் மண்டலத்தில்கண்டதில்லை
தடையில்லாமெயந்தன்சூது தனஞ்செயா அறிந்திடாமல்
குடையதுகவிழ்ந்தாப்போலே,

தரு

கொக்கரித்துவிட்டேன்பாரடா சக்கரம்தன்னை
யிக்கணத்தில்பதிசேரடா
திக்குமுக்கலாடிடவே தேர்விசையாஉன்னையானும்
பக்குவமாதிகிரியை ரூக்கியமாய்யானும்விட்டேன்
சுருள் பஞ்சபையலேஉன்னை வாட்டுவேன்
அஞ்சாமலெமன்பதி காட்டுவேன்
அண்டாண்டம்நடுங்கிட கொண்டவிடிபோலேமீறி
விண்டலத்தோர்தத்தளிக்க வீறிடஉயிரைகொல்வேன் கொ

அர்ச்சுனன் கந்தார்த்தம்

கஞ்சனைவதைத்தோமென்று கருத்தினில்கெர்வங்கொண்டு
வஞ்சகிஅரக்கிதன்னை வகையுடன்கொன்றேமென்று
அஞ்சிடாசகடன்தன்னை அவரோடுஎண்ணிஎன்னை
பஞ்சிபோல்பரக்கநீயும்,

தரு

பாசுபதஅஸ்திரமெடுத்தேன் உந்தனைகொல்ல
பாரினில்நடுங்கவிடுத்தேன்
வாசவனென்றபெயர் வையகத்திலில்லாமலே
காசினியோர்களும் காண்டீபனென்றுசொல்ல
சுருள் காட்டுவேன்சமம் பூட்டுவேன்
வாட்டுவேன்தணல் மூட்டுவேன்
வையகமுண்டமாயவனே மெய்யும்பதறிவாட
வெய்யோன்எரிப்பதுபோல் கையகணைவிடுத்தேன் பா

நாரதர் கவி

வருமையாய்யிருவர்கூடி வனத்தினில்சண்டைசெய்ய
தருணமேமறைவாய்நின்று தாஷ்டிகமாகப்பார்த்தேன்
மருமமாய்நாமிருந்தால் மானிலம்அழிந்துபோகும்
அருமையாய்கயிலைநாடி அன்புடன்செல்லுவேனே.

பொது வசனம்

இவ்விதமாக கிருஷ்ணனும் அர்ச்சுனனும், மிதமில்லாமல் ஒருவர்க்கொருவர் சண்டைசெய்ய அதுவேளை நாரதர் இதுகளை மறைவாகநின்று பார்த்துவிட்டு இனி நாம் சும்மாயிருந்தால் உலகம் அழிந்துபோகுமென்று கருதி இந்த விஷயத்தை பரமனிடத்தில் சென்று தெரிவிக்கவேண்டும் என்று நினைந்திருக்க அதுவேளை பரமசிவன் தர்பாருக்கு வருகிறவிதங் காண்க.

பரமசிவன் வருகிற கவி

திங்களைதரித்தயீசர் திகம்பரிதனக்குல்லாசர்
செங்கையில்மழுமானேந்தி ஜெகமகில்நிறைந்ததேவர்
பொங்கமாய்நந்திதேவர் பொருந்தியேஅருகில்சூழ
எங்கிலும்புகழுமீசன் ஏகியேவருகின்றேனே.

பரமசிவன் தரு

சிவலிங்கஜகதீசர் வந்தேன் கல்ல
சித்தரும்முத்தரும் சித்தம்பணிந்திட
பத்தினிபார்வதி உத்தமிஅமர்ந்திட
ஜீவர்க்கருளேமிக தந்தேன்
ஆவலாய்நந்திதேவர் அருகில்குண்டோதரனும்
சுருள் அந்தமாய்வந்தடி முந்தியேபணிய
சிந்தைமகிழ்ந்துமே சிரமதுகுனிய சி

பாவிதுரியன் செய்தசூதால் அந்த
பற்குணராஜனும் முக்கியமாக
தக்கவே தவம்செய்ய சிக்கெனவருக
பரந்தாமன் மோகினியாய்முன்னால்
தாவியணையவந்து தவத்தைகெடுக்கபார்த்தார்
சுருள் தையலராசையை தற்பரனொழித்தேன்
ஐயமில்லாமலே அஸ்திரமளித்தேன் தி
தில்லையில்நடனம்செய்த மூர்த்தி வெகு
நீதில்லாமுப்பத்துமுக்கோடி தேவரும்
சோதியாய்காளியும் மனமதுவெறுக்கவும்
சூக்ஷமாய்விளையாடினேன் கீர்த்தி
வகையாய்நடிக்கும்போது சுகமாய்குண்டலம்விழ
சுருள் வந்தவர்கண்டால் குந்தகமென்று
எந்தன்பாதத்தால் எடுத்தேனே அன்று தி
பரமன்மலர்பாதத்தை தேடிஅனுதினம்
பத்தியாய்வீரப்பன் சித்தமதாக
பக்தன்நாராயண சாமியுமாக
பாடினார் இருவர்களும்கூடி
தெரமாபுலவர்பாதம் கரம்குவித்துசேவிப்பார்
சுருள் தெரிந்தவர் அறிந்தவர் சிறந்தவர்எங்களை
பரிந்துமேகார்க்கவும் வேண்டினார்தங்களை தி

பரமசிவன் கவி

தப்பில்லாநந்திகேளாய் தரணியில்ஜீவர்க்கெல்லாம்
ஒப்புடன்படியளந்தோம் ஒளிதரும்ஆசனத்தில்
இப்பவேயமர்ந்திருப்பேன் யிருபுறம்நின்றுநல்ல
கொப்பெனசாமரங்கள் கோர்வையாய்வீசிடாயே.

பொது வசனம்

இவ்விதமாக பரமசிவம் உலகில் உண்டான ஜீவஜெந்துக்களுக்கு படியளந்துவிட்டு கைலாயத்தில் அமர்ந்திருக்க அதுவேளை நாரதர் கைலையை நாடிவருவது.

நாரதர் தரு

ஆலவிஷமுண்டோன்தன்னையே • யானுமேகாண
அதிதுருசாய் ஓடிவருகிறேனே
காலனையுதைத்தயீசரை நாரதமுனி
காணும்படி தேடிவருகிறேனே
ஆதிமாலும்அர்ச்சுனனுமே சண்டைசெய்வதை
நீதியாகசொல்லவேண்டுமே
பரமன்தன்னைகொண்டுவந்துமே யிருவருக்கும்
பகையில்லாமல்செய்வேனின்றுமே ஆல

நாரதர் கவி

அருகினிலிருக்குமெந்தன் அன்புள்ளசிஷியாவாரும்
நரியதைபரியாய்செய்த நலமுள்ளயீசருக்கு
பெருகியதவத்தில்மிஞ்சும் போனும்வந்தானென்று
சரியுடன்சீக்கிரத்தில் சாற்றுவாய்சாற்றுவாயே

நாரதர் வசனம்

வாரும் சிஷியரே! எனது தாத்தாவாகிய பரமசிவனிடம் யான் வந்ததாக தெரிவிப்பீர் சிஷியரே.

பரமசிவன் வசனம்

ஆனால் நல்லது வரச்செய்குவீர் குண்டோதரா.

நாரதர் சரண தரு

தொந்திவயத்தோனுக்கு தந்தையாகவேவந்த
எந்தன் தாத்தாவே சரணம் உனதுபாதம்
முந்திகாப்பாயே தருணம்
பந்தமாயுலகெல்லாம் சந்தோஷமாய்திரிந்து
சிந்தைமிககளித்து சீர்பாதம்சரணவந்தேன் தொ

பரமசிவன் தரு

மண்பொதுதந்தையீன்ற நாரதா யிப்போ
மகிழ்ந்து அருள்புரிந்தேன் சிரதா
வண்ணமாய்என்னைத்தேடி வந்தவிஷயமென்ன
கண்மணிநாரதரே முன்னேதெரிவிப்பாயே மண்

என்னவென்றுசொல்லுவேன் யீசா யிப்போ
எந்தன்நாவுவரவில்லை வாசா
உன்னிதமாகவே உலகம்சுற்றிவந்தேன்
உத்தமாஒருசேதிகண்டு மனம்நொந்தேன் எ

பரமசிவன் தரு

நொந்தேனென்றுசொன்ன நாரதா அதை
முந்தியுரைப்பாயே சீரதா
விந்தையானசேதி விளம்புவாயிப்போது
சுந்தரநாரதா சூக்ஷம்வையாமலே நொ

நாரதர் தரு

சூக்ஷத்தைசொல்லுவேன் ஐயனே அந்த
சுப்பிரமண்ணியர்சேதி மெய்யனே
ஆக்ஷியாய்மயிலேறி அன்புள்ளவள்ளியும்
தாக்ஷியாய்பூங்காவில் தற்பசாமடிந்தாரே சூ

பரமசிவன் தரு

இதுவென்னமோசமோ நாரதா யிப்போ
என்மனம்பதருதே மேவிதோ
எதிரியின்னுரென்று எனக்கறியச்சொல்லும்
சதிருடன்யான்சென்று சங்கதியறிகுறேன் இ

நாரதர் தரு

அரக்கனோடுசண்டை போட்டாரே வீணு
ஆறுமுகன்சும்மா பட்டாரே
திரமானவள்ளி தெய்வானையும்வாடுதே
பரமனேநீசென்று பார்வையிடுயிப்போதே அ

பரமசிவன் வழிநடை தரு

மாமுனியிருவருமாய் செல்லுவோம் வனமேதேடி யிருவர்கூடி
தாமதமில்லாமல்வழி புல்லுவோம்

நாரதர் தரு

சந்திரசடாதரனே வாருமே சம்ப்ரமதாக அம்புலிகாண
விந்தையாய்பூங்காவனத்தைப் பாருமே சங்

பரமசிவன் தரு

சீக்கிரம்நடந்துவாரும் நாரதா சிந்தைவாடவே அந்தசூரனை
முக்கியமாமடித்துவாறேன் போரதா சீ

நாரதர் கவி

பரவதன்மருகாகேளும் பாதையும்மிதுவேயாகும்
தீரமுடன்உந்தனுக்கு தெரிவித்தேன்யானுமிப்போ
மரந்திடும்வழிதானிப்போ மாமுனியிங்கிருப்பேன்
சரமுடன்சென்றயிப்போது சடுக்கெனவந்திடாயே.

பரமசிவன் தரு

நாரதன்சொன்னமொழிகேட்டு நல்ல
நாகேசர்நடந்தேனே கயிலையைவிட்டு
சரவணபவன்தன்னை கொன்ற அந்த
சண்டாளனைக்காண வருவேன்நன்றே
சூலகபாலத்தால் இன்று அவனை
சூக்ஷமாய்கொல்லுவேன் பதரிடநன்று
மைந்தனைகொன்றிட்ட சூரனை யாரும்
மடிக்காமல் விடுவேனோதீரனை நா

கிருஷ்ணன் சண்டை தரு

என்வடாஎன்னிடம் எளிதம்பேசுராய்மூடனே
சின்னபின்னமாகசிதரிட செய்குவேன்கேடனே
என்னிடமகிமையை எண்ணிப்பாராமலேதீரனே

கருள் ஏதடாஎன்னிடம் பேசாதே
வாதனையாய்வந்து மடியாதே
வகையில்லாமூடனே வல்லுயிர்வாங்கிட
சிகையதுபொடிபட சிதைக்குறேன் தேங்கிட ௭

அர்ச்சுனன் தரு

சொல்லுவேனென்றுசொல்லாதே என்னிடம்பேயனே
எல்லையிலெந்தன்வீரமும் அறியாமல்மாயனே
அல்லல்வாராமுன்னே அப்புறம்ஓடடாதாயனே
கருள் அமரதுசெய்யவே வந்தாயே
சமரதுபுரியாமல் நொந்தாயே
சத்தசாகரம்தத்தளித்து ஒடுங்கிட
வெற்றிபெற்றவிசயனென்று வீரர்கள்நடுங்கிட ௧ ॥

பரமசிவன் கந்தார்த்தம்

கூச்சலும்அதிகமாக குறையோடுயிரையக்கண்டேன்
ஆச்சரியம்நேர்ந்ததிப்போ மாமுனிவார்த்தைபோலே
ஆச்சரியம்தன்னையிப்போ அன்புடன்காணவேண்டி
பாய்ச்சல்புலிபோல்நீங்கள்,

தரு

பதரவேண்டாமே நில்லுங்கள் இருவர்களும்
பகைநேர்ந்ததென்ன சொல்லுங்கள்
அதரபதரசண்டை அலங்கோலம்செய்தீராகுல்
பதம்தெரியாதமூடர் பரிகாசம்செய்வார்முன்னால்

கிருஷ்ணன் வேறு தரு

பாசுபதாஸ்திரம்தந்தால் மைத்துனரே அந்த
பற்குணன்கர்வம்கொண்டான் மைத்துனரே
வாசவாஞாயம்ஒன்றும் வழங்காதேஎன்னிடத்தில்
ஈசனேஉன்னெதிரில் எமபுரம்சேர்க்கிறேன்பார்

பரமசிவன் தரு

எத்தனைசொன்னபோதும் மைத்துனரே உந்தன்
சித்தமிரங்கலையோஎன் மைத்துனரே
குற்றங்கள்நேர்ந்ததென்ன கூறுவாயானறிய
பத்தாவதாரனேபதா வேண்டாம்நில்லுமே ௭

அர்ச்சுனன் தரு

உந்தனருளாலல்லோ யீசரே இடையன்
ஓடிவந்தான்சமர்செய்ய வாசரே
அந்தரமாயுன்பாதத்தால் அளித்தசக்ரம்கொண்டு
எந்தனிடம்சமருக்கு ஏகிவந்தானேதூதன

பரமசிவன் தரு

இந்திரன்சுதனுன அர்ச்சுனு இப்போ
இடர்வந்துநேர்ந்ததென்ன பற்குணு
சந்தேகமில்லாமலே சாற்றுவாயெந்தனுக்கு
பந்தமாயுங்களுக்கு பக்குவமாயாதுரைப்பேன் இ

கிருஷ்ணன் வேறு தரு

என்னிடபேரனுல் ஈசா இந்த
இடுக்கமுநேர்ந்ததே வாசா
உன்னிதபுரவியை ஒவி ஆுடன்தந்துமே
அந்நீதகலகமும் அருமுனிசெய்தானே எ

பரமசிவன் தரு

இந்தப்புரவியேது மாயனே நீயும்
எனக்குவிபரஞ்சொல் சகாயனே
அந்தமானபரிபோ லெங்கும்காணேனே
எந்தேவர்அல்வம் முந்தியுரைத்திடும் இ

அர்ச்சுனன் தரு

அன்பானபுரவியை நாரதன் எனக்கு
அளிக்கவும்வந்தாரே சீரதன்
பின்னப்படஎன்னை பேடியென்றுபேசி
அன்னிதமாகவே அல்வத்தைமடக்கினர் அ

பரமசிவன் தரு

இதற்காகவோசண்டைசெய்வது நீங்கள்
ஈடில்லாகோபத்தா லுய்வது
மதுருதனுநீங்கள் மல்லுசெய்யவேண்டாம்
இதுசேதியைதேவர் யேளிதம்செய்வாரே இ

நாரதர் தரு

இதுவேவெகுநல்ல கூட்டம் யிப்போ
என்னுலேவந்தது நாட்டம்
அதுதெரியாமலே ஆணையைகார்த்தவா
மெதுவாகபேசாதே மீட்டுங்கள்பார்க்கலாம் இ

கிருஷ்ணன் தரு

படுபாவிநாரதா வாடா நீயும்
பக்குவம்செய்தாயேமூடா
சடுதியாய்யப்புரம் சண்டாளாநீசெல்லும்
தடுமாருதேநெஞ்சம் தப்பாமல்உரைசெய்தேன் ப

நாரதர் தரு

சாமளரூபனே கேளும் நீயும்
சங்கட்டம்பேசாதே நாளும்

தாமதமில்லா தாத்தாவேஎன்மீதில்
தாருமாருகசண்டை போடாதேயின்றுனில்

லக்ஷிமி தரு

போடாபோடாநீயும் யோக்கியனோ யிப்போ
புகட்டுராய்ஞாயம் சிலாக்கியனோ
ஏடாகூடமாகயிருவர்க்கும் கலகத்தை
மூடாசெய்துவைத்தாய் ஓடடா அப்புறம் போ

நாரதர் தரு

பாட்டிபாட்டிஎன்னை பேசாதே நீயும்
பக்குவமறியாமல் பேசாதே
நீட்டுருய்ஞாயத்தை நெடியமால்தேவியே
நாட்டமாயிதுசேதி நானொன்றுமறியேனே பா

அர்ச்சுனன் தரு

மாமுனியேயிது ஞாயமா எந்தன்
மனதைகெடுத்தீரே நேயமா
காமன் தன்னையளித்த கண்ணனிடபோரா
தாமதமில்லாமல் தயங்கலானேம்யிப்போது மா

சுபத்திரை தரு

நல்லதுநல்லது நீதமேரமுனிநாதரே
நாங்கள்வாடலானேம் போதரேயிப்போவேதரே
உல்லாசமாகவந்து உளவுமேசெய்தீரே
புல்லெனகலகத்தை புகட்டியேவிட்டீரே ந

நாரதர் கந்தார்த்தம்

எல்லோரும்கூடிக்கொண்டு எந்தனை நீங்கள்சும்மா
தொல்லையும்செய்யவேண்டாம் சோதன அம்மமாரே
புல்லெனகலகம்யானும் புகட்டவும்யில்லைஎன்மேல்
சொல்லாதவீண்பழிதான்,

தரு

சொகுசுடன்போய்வருவேனே நீங்களுமேதான்
சுத்தமாயிருப்பீர்தினமே
தகுபீதாம்பரனேநீ தாரும்விடைஎனக்கு
மகுத்துவமுள்ளதேவா மாமுனிசொன்னசெய்வேன் சொ

லக்ஷிமி கந்தார்த்தம்

விடையதுகேழ்க்கவந்த வேலையற்றவனேபோடா
சடசடவென்றுவந்து சதிகாரகலகம்மூட்டி
மடமயில்சுபத்திரைமீதில் மார்க்கமாய்என்னிடத்தில்
தடையில்லாபழியைவைத்து,

தரு

தந்திரமாகவந்து புரவிதன்னை
தாக்ஷண்யமாகவேதந்து
குந்தகம்நேர்ந்திட்டதே குண்டுணிநாரதனே
எந்தகாரணத்தாலே யிந்தபடிகெடுத்தாய் த

பரமசிவன் கவி

வேலவன்பிறந்தானென்று வேண்டியதிருக்குசெய்து
கோளனேஎன்னையிப்போ கொண்டுவந்துவிட்டு
மீளாதசண்டைசெய்ய மிதமில்லாகலகம்லைத்தாய்
பாலனேபுரவிசேதி பகருவாய்பகருவாயே.

பரமசிவன் வசனம்

வாரும் நாரதா! என்னிடத்தில்வந்து உன் மைந்தன் சுப்பிர மணியர் சூரர்களோடு சமர்செய்து யிறந்துவிட்டானென்று பொய் வார்த்தைசொல்லி. என்னை கொண்டுவந்து நடுவழியில் விட்டுபோகும் படி தெரிவித்தாய். நான் இங்ஙனம் வந்துபார்த்தால் இப்படி இருக்கிறது. தவிரவும் இந்த அஸ்வம் ஏது எங்கிருந்துகொண்டு வந்தாய் எனக்கு விபரமாக தெரியச்சொல்லும் நாரதா.

நாரதர் கவி

சொல்லுவேன்கேளுமிப்போ சுந்தரமூர்த்திநீயும்
நல்லமேதார்அஸ்வந்தானும் நாடாளுமரசனுகும்
அல்லலைதீர்ப்பதற்கு அருஞ்சுதன்யில்லையென்று
புல்லிலனதர்மம்செய்த புண்ணியனறிந்திடாயே.

நாரதர் வசனம்

கேளும் ஜெகதீசா! இந்த அஸ்வம் ஏதென்றால் பூலோகத்தில் மயேந்திரபுரியை அரசாளும் சுந்தரராஜன். இவன் தேவி சுந்தர வல்லியாகும். இவர்கள் பிள்ளையில்லாமல் தங்களைநோக்கி தவம் செய்ய நினைத்தான். அதற்கு அவன் தேவி வேண்டாமென்று தடுத்து, நாம் பதியில் இருந்தபடியே வேண்டிய தானதர்மம் செய் யலாமென்று சொல்ல; அதற்கு இசைந்து இந்த சுந்தரராஜன் மூப்பத்திரண்டு தானமும் செய்கிறேனென்று ஓர் போர்டுபலகை எழுதி கட்டிவைத்தான். இப்படி இருக்கும்போது நான் உலகத்தை உல்லாசமாக சுற்றிவரும்போது இதைக்கண்டு அங்கு நான் சென் றேன். எனக்கு அவன் வேண்டியதானம் கொடுத்தான். நான் வேண்டாமென்று தடுத்துவிட்டேன். அது யாதெனில் நான் இவன் மனதை சோதிக்கும்படி கன்னிகாதானம் கேட்டேன். அதற்கு அவன் இல்லையென்று சொன்னான். அதற்கு நான் அவன் மனை வியை தரும்படி கேழ்க்க, இவன் கோபம்கொண்டு பலவிதமாக என்னை வைதான். பிறகு நான் கோபமீறி அவனை அஸ்வமாக போகும்படி சாபமிட்டேன் சுவாமி.

பரமசிவன் கந்தார்த்தம்

படுபாவிநாரதா நீ பாராளும்ராஜனுக்கு
கொடுத்திட்டாய்அஸ்வசாபம் குவலயம்தன்னிலிப்போ
அடுத்திடும்பழிபாவங்கள் அருமுனிஉனக்கேயிப்போ
சடுக்கெனஉனக்கேஅஸ்வ,

தரு

சாபந்தந்தேன்பாரடா நாரதாயிப்போ
சஞ்சலமடைந்துசேரடா
தாப்பிரியமானசாபம் தப்பாமல்உன்னைசார்ந்து
யீபத்தடைந்துயிப்போ எங்கும்திரியப்போறாய் சா

பரமசிவன் வசனம்

வாரும் நாரதா! என் பக்தனென்று பாராமல் நீ அவனுக்கு அஸ்வமாக சாபம் தந்தாய். இப்பொழுது அந்த அஸ்வசாபம் உனக்கு தந்தேன் நாரதா.

நாரதர் புலம்பல்

சத்துசித்தானந்தசந்திரசேகரா கைலைநாதனே
சித்தம்வாட அஸ்வசாபமும் தந்தீரே கைலைநாதனே

லக்ஷிமி முடுக்கு தரு

ஆத்திரம்கொண்டுமேஅழுதுபுலம்பாதே நாரதனே
கோத்திரம்கெடுக்கவேதுண்டுணியாய்வந்தாய் நாரதனே

நாரதர் புலம்பல் தரு

அன்னீதசாபத்தைஅரனாரும்கொடுத்தாரேஎன் அன்னையரே
பின்னம்வாராமலேபிரியமாய்காத்தருள் அன்னையரே

சுபத்திரை முடுக்கு தரு

அண்ணன் அண்ணிமீதில்பொறுமைவார்த்தையாய் நாரதரே
என்னிடம்வந்துமேஎடுத்துகலகம்செய்தீர் நாரதரே

நாரதர் புலம்பல் தரு

தெரியாமற்செய்தபிழையைபிரியம்வைத்து அருளும் ஓஅம்மணியே
அரிபரந்தாமனால்அஸ்வசாபத்தைதீரும் என் அம்மணியே

அர்ச்சுனன் முடுக்கு தரு

கள்ளவேடம்பூண்டுமெள்ளசெல்லசொன்னீர் மாமுனியே
உள்ளம்பதறுதேஉற்றுயோசித்தாலே மாமுனியே

நாரதர் புலம்பல் தரு

சுந்தரராஜருக்குமுந்திசாபம்தந்ததால் ஓபற்குணனே
இந்தவிதம்செய்தேன்பிந்திமாற்றலாமென்று ஓபற்குணனே

கிருஷ்ணன் முடுக்கு தரு

எனக்குஅஸ்வம்தந்துபிணக்குசெய்துவைத்த மூடனே
வணக்கத்தோடுவந்துவழங்காதேவீண்வார்த்தை மூடனே

0-,892NVP3,KA
N47



நாரதர் கவி

கந்தனையளித்தநாதா காரணப்பொருளேயிப்போ
அந்தமாய்சிறுவன்செய்த அபத்தமேஎண்ணிடாமல்
சிந்தையிலன்புகூர்ந்து சிவசிவாயிந்தவேளை
தந்திட்டசாபந்தன்னை தற்பராதீர்த்திடாயே.

நாரதர் வசனம்

கேளும் கைலாசவாசா! நான் தெரியாமல்செய்த குற்றத்தைப் பொறுத்து ரக்ஷித்தாளவேண்டும் ஜெகதீசா.

பரமசிவன் கவி

சரிசரிநாரதாகேள் சஞ்சலப்பட்டாலென்ன
பரியதாய்தந்தசாபம் பாலனேகொஞ்சகாலம்
திரிந்துமேயிருந்தால்பின்னால் தீதில்லாதர்மர்யாகம்
நெறியுடன்செய்யப்போகிறார் நேர்ந்திட்டசாபம்தீர்ப்பேன்.

பரமசிவன் வசனம்

வாரும் நாரதா! தருமர் அஸ்வமேதயாகம் செய்யப்போகிறார் அதுகாலையில் உனக்குத்தந்த சாபம் விமோசனமாகும் நாரதா இனி இதுபோல் வீண்கலகத்தை மூட்டி ஒருவர்க்கொருவர் வம்புவழங்குவது சரியல்ல நாரதா. வாரும் மைத்துனு கேளும் அர்ச்சுனு நீங்கள் இப்படி சண்டைசெய்தால் தேவர்கள் பரிகாசம் செய்வார். இனி இப்படி யிருக்கவேண்டாம். இப்போது நாம் இந்த சுந்தரராஜன் அஸ்வமாயிருப்பதை இப்போது இவன் இராஜனுகும்படி அருள்பாலித்தேன். இனிமேல் இந்த சுந்தரராஜன் சுகமாக வாழ்கவும் புத்திரபாக்கியம் ஏற்படவேண்டி வரம்பாலித்தோம். இனி தங்கள் தங்கள் இருப்பிடம் போய்வாருங்கள். தேவர்களே! இந்த சுந்தரராஜன் பாபவிமோசனமென்னும் கிருஷ்ணன் அர்ச்சுனன் சண்டைநாடகத்தைப் பாடினபேரும் ஆடினபேரும் கண்குளிரப் பார்த்து செவியுற்று கேட்டபேரும் சாலோக சாரூப சாமீப சாயுச்சியம் என்று சொல்லப்பட்ட நான்காம் பதவிக்கு சேர்வார் என்பதாம். சுபம்! சுபம்!! சு!!!

சுந்தரராஜன் பாப விமோசன மென்னும்
கிருஷ்ணன் அர்ச்சுனன் சண்டை நாடகம்
முற்றிற்று.

---

TAMIL NADU ARCHIVES LIBRARY
103814

மலர்மகள் விலாசம் பிரஸ், சென்னை.
எம்எஸ். 339. காபி 1000. (30-6-1947)

# ஸதநாமாவளி ஸ்தோத்திரம்

ஓம் ஹரி ஹரி
நரஹரி, முரஹரி
அம்புஜாக்ஷரி
அச்சுதா, உச்சிதா
பஞ்சாயுதா
பாண்டவர் தூதா
லக்ஷ்மீசமேதா
லீலாவிநோதா
கமலபாதா
ஆதிமத்யாந்தரகிதா
அனாதரக்ஷகா
அகிலாண்டகோடி
பிரம்மாண்டநாயகா
பரமானந்தா
முகுந்தா
வைகுந்தா
கோவிந்தா
பச்சைவண்ணா
கார்வண்ணா
பன்னகசயனா
கமலக்கண்ணா
ஜனார்த்தனா
கருடவாஹனா
ராக்ஷஸமர்த்தனா
காளிங்கநர்த்தனா
சேஷசயனா
நாராயணா
பிரம்மபாராயணா
வாமனா
நந்தநந்தனா
மதுசூதனா
பரிபூரணா
சர்வகாரணா
வேங்கடரமணா
சங்கடஹரணா
ஸ்ரீதரா
துளசீதரா
தாமோதரா
பீதாம்பரா
சீதாமனோஹரா
மச்சகச்சவராஹவதா
பலபத்ரா [ரா
பரமதயாபரா
பரமேசுவரா
சங்குசக்ரா
ஸர்வேஸ்வரா
கருணாகரா
ராதாமனோகரா
ஸ்ரீரங்கா
ஹரிரங்கா
பாண்டுரங்கா
லோகநாயகா
பத்மநாபா
திவ்யசொரூபா
புண்ணியபுருஷா
புருஷோத்தமா
ஸ்ரீராமா ஹரிராமா
பரந்தாமா
நரசிம்மா
திரிவிக்ரமா
பரசுராமா
சஹஸ்ரநாமா
பக்தவத்ஸலா
பரமதயாளா
தேவானுகூலா
ஆதிமூலா
ஸ்ரீலோலா
வேணுகோபாலா
மாதவா, யாதவா
ராகவா, கேசவா
வாசுதேவா
தேவதேவா
ஆதிதேவா
ஆதிபதபாந்தவா
மஹானுபாவா
வசுதேவிதநயா
தசரததநயா
மாயாவிலாசா
வைகுண்டவாசா
சுயம்பிரகாசா
வேங்கடேசா
ருஷீகேசா
சித்விலாசா
கஜபதி, ரகுபதி
சீதாபதி
வேங்கடாசலபதி
மாயா, ஆயா [யா
வெண்ணெயுண்டே
அண்டர்களைத் [illegible]
தூயா
உலகமுண்டவாயா
நானைவுபாயா
பக்தர்கள் சகாயா
சதுர்ப்புஜா
கருடத்துவஜா
கோதண்டஹஸ்தா
புண்டரீகவரதா
ஓ! விஷ்ணு
ஓ! பராத்பரா
பரமதயாளா
ஓம் நாராயணா
நமோநாராயணா
ஸ்ரீமந்நமோநாராய
சரணம்ப்ரபத்யே [ணா
ஸ்ரீமதே நாராய
ணாய நம
கோவிந்த கோவிந்த
கோபால கோபால

ஸதநாமாவளி ஸ்தோத்திரம் முற்றிற்று.